REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மார்ச் 19 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 67 | Saturday 19, March, 2022 | 16பக்கங்கள் | 30/-

நாளை தினகரன் வாரமஞ்சரி
வாரமஞ்சரியுடன்...
க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு பல்வேறு தெரிவுகளுடன் கல்விச் சிறப்பிதழ்...
Education Supplement

## இலங்கையுடன் ஆரம்பகட்ட பேச்சு நடத்த IMF தயார்

### IMF பேச்சாளர் கெரி ரைஸ் அறிவிப்பு



இலங்கைக்கு ஆதரவளிக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கையுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன் பேச்சாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் சென்யோங்ரி கடந்த 15ஆம் திகதி 06

நெருக்கடிக்கு மத்தியிலும் அபிவிருத்தி:

## பிரதமர் மஹிந்த இன்று யாழ்ப்பாணம் விஜயம்



யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றை இன்று மேற்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தென்மராட்சி மட்டுவில் வண்ணத்தி பாலத்திற்கு அருகில் உள்ள பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைக்க ஏற்பாடாகியுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதமர் 06

## நீண்ட வரிசைகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

### அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு



எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையை முடிவுக்கு கொண்டுவர எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதன் அடிப்படையில், கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் 06

இந்திய பயணத்தை நிறைவு செய்து

## அமைச்சர் பசில் நாடு திரும்பினார்



இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று மதியம் நாடு திரும்பினார். அவர் புது டில்லியில் இருந்து நேற்று மதியம் 1.40 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

நிதியமைச்சரின் இந்திய விஜயத்தின் போது, இந்திய அரசாங்கத்திடம் இருந்து 1.9 பில்லியன் டொலர் கடனுதவியை 06

கப்பலிலிருந்து 3,500 மெ.தொன் எரிவாயு இறக்கும் பணி மும்முரம்

# எரிவாயு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது




நாளொன்றுக்கு 1,20,000 வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்க திட்டம்

## நேற்று முதல் நாடு முழுவதும் விநியோகம் ஆரம்பம்

நாடு முழுவதும் உள்ள பிரதேசங்களுக்கு, சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமானதாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.


நாளொன்றுக்கு 120, 000 வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய தற்போது நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் கிரமமாக குறைவடையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில், நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலில் இருந்து 3,500 மெட்ரிக் தொன் எரிவாயுவை தரையிறக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டன.

இந்த எரிவாயு இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவிற்காக ஓமான் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய 8 மில்லியன் டொலர் கொடுப்பனவை செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததை அடுத்து, எரிவாயு தரையிறக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும், நாட்டின் பல பாகங்களிலும், நேற்றைய தினமும் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததை காணமுடிந்தது.



ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம செயலாளருமான ஜே ஷா (Jay Shah) நேற்று (18) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார். அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி எஷ்லி டி சில்வா ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.



## 40,000 மெற்றிக் தொன் டீசல் நாளை இலங்கை வருகிறது

03

## மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு முறைமையில் மாற்றம்

### சத்துணவு மதிப்பீட்டு தொகை அதிகரிப்பு



பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவுக்கான மதிப்பீட்டுத் தொகையிலும், உணவு முறைமையிலும் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், உணவுக்காக ஒதுக்கப்படுகின்ற மதிப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதென பாடசாலை 06

## IMF இன் உதவியை பெறுவது அவசியம்

### UNP தலைவர் ரணில் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உதவியை அரசாங்கம் பெற வேண்டியது மிகவும் அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்தினால் மாத்திரம் நாட்டிலுள்ள பிரச்சினைகளை தீர்க்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ள அவர், நமது நாடு 06

## கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு என்பது பொய்

### பொலிஸ் திணைக்களம் தெரிவிக்கிறது



நாட்டின் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்தில் எவ்விதமான உண்மையும் இல்லையென பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், பொதுமக்கள் கொள்ளைச் சம்பவங்கள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக சிலர் பொய்யான பிரசாரங்களை பரப்புவதாக, 06

## ஜனாதிபதியுடனான பேச்சுக்கு நிகழ்ச்சி நிரல் ஒன்று அவசியம்

### தமிழ் கூட்டமைப்புக்கு சுரேஷ் அறிவுரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே 06



நீரிழிவு நோயினால் காலை இழந்து தவித்து வந்த றம்புக்கனை, சியம்பலங்கமுவ பகுதியைச் சேர்ந்த அனுஷா அத்தநாயக்க என்ற பெண்மணிக்கு அலரிமாளிகையில் வைத்து (17) பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷவினால் செயற்கை கால் வழங்கி வைக்கப்பட்டது. சுமார் 10 வருடங்களாக நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வந்த 55 வயதுடைய இப்பெண்மணி, பிரதமரின் பாரியாரிடம் தனது துன்பங்களை தெரிவித்ததன் விளைவாக அவருக்கு செயற்கைக் கால் வழங்கப்பட்டது.

## பாடசாலை பஸ் விபத்து 15 மாணவர்கள் காயம்


### வலஸ்முல்லயில் நேற்று சம்பவம்



பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகியதால் அதில் பயணித்தவர்களில் 15 மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 06

## உயிருடன் இருக்கும் நபருக்கு மரண சான்றிதழ்

### எம்பிலிபிட்டியவில் சம்பவம் பதிவு



எம்பிலிபிட்டிய, செவனகல, நெலும்வெவ பிரதேசத்தில் உயிருடன் இருக்கும் ஒருவருக்கு மரண சான்றிதழ் வழங்கப்பட்டமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. 06

## சாவகச்சேரி 'சதொச'வுக்கு அமைச்சர் பந்துல திடீர் விஜயம்

### யாழ். வர்த்தக, கையிருப்புகள் குறித்தும் ஆராய்வு



யாழ். மாவட்டத்துக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் விற்பனை மற்றும் கையிருப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன , சாவகச்சேரி சதொச விற்பனை நிலையத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை 06

## 4,000 கொள்கலன் வாகனங்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

### டீசல் பற்றாக்குறை காரணமாம்



டீசல் தட்டுப்பாடு காரணமாக, கொள்கலன்களை கொண்டு செல்லும் கனரக வாகனங்களை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாகவும் இதுவரை நான்காயிரம் கனரக வாகனங்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கொள்கலன் வாகன உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சரத் மஞ்சுள தெரிவித்தார். நாட்டுக்கு அன்றாடம் தேவைப்படும் உணவுகளையும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களையும் கொழும்பிலிருந்து 06

## ரஷ்யாவின் தீவிர தாக்குதலில் உக்ரைன் திரையரங்கு தரைமட்டம்

### பாடசாலைக்கும் சேதம்; 21 பேர் வரை பலி



பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த 3 அடுக்கு திரையரங்கில் ரஷ்யா வான்வழித் தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். அத்துடன் கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. கிழக்கு உக்ரைன் நகர் ஒன்றில் ரஷ்யா நடத்திய ரொக்கெட் குண்டு தாக்குதலில் 21 பேர் உயிரிழந்ததாக 06

புத்தளம்–கற்பிட்டி மோட்டார் சைக்கிள் பேரணி;


## பொதுமக்களின் எதிர்ப்பினால் இடைநிறுத்தப்பட்டது

### தமது அமைச்சுக்கு தொடர்பில்லை என நாமல் தெரிவிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக கற்பிட்டி முதல் அநுராதபுரம் வரையான மோட்டார் சைக்கிள் பேரணி நேற்று இடைநிறுத்தப்பட்டது.

பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் நிபந்தனைகளை மீறி செயற்பட்



டதன் காரணமாக மோட்டார் சைக்கிள் பேரணி நிறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் தலைமையகம் 06

### விக்கல் வீராச்சாமி



நாட்டில எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் நீண்ட வரிசையில நிக்கிற சனத்தை பாத்தா பாவமா இருக்கு....

ஆனா ரோட்டுல போற வாகனம் குறைஞ்ச மாதிரி தெரியல, முன்னத விட அதிகமா வாகன நெரிசல் இருக்கு, அதுதான் யோசனையா இருக்கு...!!!

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## ஜம்மு விண்வெளி நிலையத்துக்கு சதீஷ் தவான் பெயர் சூட்டப்படும்

### இந்திய அமைச்சர் தெரிவிப்பு

ஜம்முவில் அமைக்கப்பட்டுள்ள விண்வெளி நிலையத்துக்கு இஸ்ரோவின் முன்னாள் தலைவர் சதீஷ் தவானின் பெயர் சூட்டப்படும் என்று விஞ்ஞான தொழில்நுட்பத்துறைக்கான இராஜாங்க அமைச்சர் ஜதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

"சதீஷ் தவான் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர் என்பது பலருக்குத் தெரியாது. அவரது பெயரைச் சூட்டுவதற்கு உபவேந்தரும் இசைவு தெரிவித்துள்ளார். தனியார் பங்களிப்புடன் மேலும் விண்வெளி தொழில்நுட்ப ஆய்வு நிலையங்களை அமைத்துள்ளோம். திருவானந்தபுரத்தையடுத்து இரண்டாவது நிலையம் ஜம்முவிலேயே அமைக்கப்பட்டுள்ளது. விமானவியல் மற்றும் விண்ணியல் துறைகளில் உயர் கற்கைகள் இவ்வருடம் ஆரம்பிக்கப்படும்" என்று ஊடகவியலாளர்களுடன் உரையாடும் போது குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் சமீபத்தில் நடைபெற்ற ஐந்து மாநிலத் தேர்தல்கள் தொடர்பாகவும் கருத்து வெளியிட்டார்.




பா.ஜ.க. ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை ஆரம்பித்திருப்பதாகவும் பா.ஜ.க.வின் கலாசாரத்தை பின்பற்றாத ஏனைய கட்சிகளுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்றும் தெரிவித்த இவர், கடந்த 50 60 வருடங்களாக காங்கிரஸ் தமது வெற்றிக்காக சாதியையும் மதத்தையுமே பயன்படுத்தி வந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

## உக்ரைனில் இருந்து மாணவரை மீட்டதற்காக அயல் நாட்டு தலைவர்கள் மோடிக்கு நன்றி தெரிவிப்பு

உக்ரைனில் சிக்கியிருந்த நேபாள மற்றும் வங்க தேச மாணவர்களை ஒபரேஷன் கங்காவின் மூலம் மீட்டுத் தந்தமைக்காக அந்நாடுகளின் பிரதமர்கள் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.



உக்ரைனில் உள்ள இந்தியர்களை மீட்டு வருவதற்காகவே இந்தியா இந்த மீட்புப் பணியை ஆரம்பித்தது. இதுவரை இருபதாயிரம் பேருக்கு மேற்பட்டோர் விமானங்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு நேபாள மாணவர்களும் ஒன்பது வங்கதேச மாணவர்களும் அடங்குவர்.

இந்தியா வழியாக நான்கு மாணவர்களும் காட்மண்டு வந்து சேர்ந்தனர். இதற்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக நேபாள பிரதமர் ஷர் பகதூர் தோபா தெரிவித்துள்ளார். இதேபோல ஒன்பது வங்கதேசத்தவர்களை மீட்டு வந்ததற்காக அந்நாட்டின் பிரதமர் ஷேக் ஹஸீனாவும் பாரதப் பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதே சமயம் பாகிஸ்தானிய மாணவியான அஷ்மா ஷஃபீக் தன்னை உக்ரைனில் இருந்து மீட்டு வந்ததற்காக பாரதப் பிரமருக்கு நன்றி தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் மீதான படையெடுப்பு:

# ரஷ்யா மீது தடைகள் அதிகரிப்பு: போர் களத்திலும் முட்டுக்கட்டை



உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிராக ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா நேற்று ரஷ்யா மீது புதிய தடைகளை விதித்துள்ளன. உக்ரைனின் எதிர்ப்புக்கு மத்தியில் ரஷ்யப் படை ஸ்தம்பித்திருப்பதாக மேற்கத்திய நாடுகள் குறிப்பிட்டபோதும் போரினால் பேரழிவுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி படையெடுப்பை ஆரம்பித்த ரஷ்ய துருப்புகள் தடுமாற்றம் கண்டிருப்பதாக மேற்கத்திய தரப்புகள் மற்றும் உக்ரைன் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். உக்ரைனில் விரைவான ஒரு வெற்றி மற்றும் ஜனாதிபதி வொலொடிமிர் செலென்ஸ்கியின் அரசை வீழ்த்தும் திட்டத்தில் ரஷ்யா பின்னடைவை சந்தித்து வருகிறது.

உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாகவும், உக்ரைன் படையினரின் இடைவிடாத எதிர்தாக்குதல் காரணமாகவும், ரஷ்யப் படைகளின் தாக்கும் திறன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் தங்கள் தாக்குதலை தொடர்வதில் ரஷ்யப் படைகள் போராடிவருவதாக, பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகத்தின் அண்மைய உளவுத்துறை மதிப்பீடு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இராணுவ தளவாட பிரச்சினைகள் தொடர்வதால், உக்ரைன் மீதான படையெடுப்பில் ரஷ்யப் படைகள் முன்னேற முடியாமல் தள்ளாடிவருகிறது,' என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யப் படையினரின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கம் மற்றும் வான்படை பற்றாக்குறை காரணமாக, அப்படையினருக்கு 'அத்தியாவசிய பொருட்களான உணவு மற்றும் எரிபொருள்' உள்ளிட்டவற்றை விநியோகிக்க இயலவில்லை என அதில் கூறப்பட்டுள்ளது. 'இடைவிடாத உக்ரைனிய எதிர்த் தாக்குதல் காரணமாக, தங்களின் விநியோகச் சங்கிலியை காப்பதற்காக அதிகளவிலான ரஷ்யப் படைகளை திசைதிருப்ப வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வியாழக்கிழமை அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில், 'உக்ரைன் முழுதும் ரஷ்யப்படைகள் முடக்கப்பட்டுள்ளதாக' குறிப்பிடப்பட்டிருந்ததை பிரதிபலிக்கிறது.

இதனிடையே கடந்த 24 மணி நேரத்தில் உக்ரைனில் எந்த ஷெல் தாக்குதலும் பதிவாகவில்லை என்று அமெரிக்க பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்துள்ளார்.

போர்க் களத்திலான பின்னடைவுகள் மற்றும் மேற்கத்திய நாடுகளின் கடுமையான பொருளாதார தடைகளுக்கு மத்தியிலும் தமது நிலைப்பாட்டில் இருந்து இறங்குவது பற்றி ரஷ்ய ஜனாதிபதி சிறிய சமிக்ஞை ஒன்றையே வெளியிட்டுள்ளார்.

தமது பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் தாக்கத்தை தாங்கிக்கொள்ள சீனா உதவும் என்று புட்டின் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கு 800 மில்லியன் டொலர் புதிய இராணுவ உதவி பற்றி அமெரிக்க அறிவித்திருப்பதோடு ரஷ்யாவுக்கு சீனா நேரடி இராணுவ உதவிகள் அளிப்பது பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சீனா ரஷ்யாவுக்கு உதவுவது பற்றிய கவலைக்கு மத்தியிலேயே இந்த தொலைபேசி உரையாடல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரைனில் ரஷ்யாவின் செயற்பாடுகளுக்கு கண்டனம் வெளியிடுவதற்கு அல்லது அதனை ஒரு ஆக்கிரமிப்பாக அறிவிப்பதற்கு சீனா மறுத்து வருகிறது. உக்ரைனின் இறைமையை மதிப்பதாக குறிப்பிடும் சீனா, ரஷ்யா தனது பாதுகாப்பு கவலைகள் பற்றி நடவடிக்கை எடுக்க உரிமை இருப்பதாக தெரிவித்துள்ளது.

சீனாவுக்கான ரஷ்ய தூதுவரை சந்தித்திருக்கும் சீன வெளியுறவு அதிகாரி ஒருவர் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதாக சீன வெளியுறவு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ரஷ்யாவின் தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது தனித்தனியே தடைகளை அறிவித்துள்ளன. இதில் அவுஸ்திரேலியாவின் சுரங்கத் தொழில்துறையுடன் தொடர்புடைய இரு செல்வந்தர்களுடன் ரஷ்ய அரசுக்கு சொந்தமான ஆயுத ஏற்றுமதி, நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியும் இந்த தடையில் உள்ளடங்குகின்றன.

உக்ரைனில் இதுவரை 2,032 பொது மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 780 பேர் கொல்லப்பட்டு 1,252 பேர் காயமடைந்திருப்பதாகவும் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. சுமார் 3.2 மில்லியன் பேர் அண்டை நாடுகளுக்கு தப்பிச் சென்றிருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

ஹங்கேரி, சுலோவாக்கியா, ருமேனியா, மோல்டோவா ஆகிய அண்டை நாடுகளில் பலர் தஞ்சம் புகுந்துள்ளனர். போலந்தில் மிக அதிகமாக ஒவ்வொரு நாளும் 10,000க்கும் மேற்பட்டோர் எல்லையைக் கடக்கின்றனர்.

உக்ரைனிலிருந்து சில அகதிகள் ஜெர்மனி, செக் குடியரசு என மேற்கு ஐரோப்பாவுக்குச் செல்கின்றனர். உக்ரைன் பூசலிலிருந்து உக்ரேனியர்கள் வெளியேறுவதற்கு அவை ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால் பெரிய அளவில் அகதிகள் வந்தால் சவாலாக இருக்கும் என்று அவை ஒப்புக்கொண்டுள்ளன.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையில் தொடர்ச்சியாக நான்காவது நாளாகவும் கடந்த வியாழக்கிழமை பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. எனினும் உடன்படிக்கை ஒன்று இன்னும் எட்டப்படவில்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

தெற்கு துறைமுக நகரான மரியுபோலில் இடிபாடுகளில் சிக்கியிருப்போரை காப்பாற்ற மீட்பாளர்கள் போராடி வருகின்றனர். பொதுமக்கள் தஞ்சம் பெற்றிருந்த திரையரங்கு ஒன்றின் மீது கடந்த புதன்கிழமை வான் தாக்குதல் ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இந்தத் தாக்குதலை ரஷ்யா மறுத்துள்ளது.

திரையரங்கு மீதான தாக்குதலில் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் பற்றி இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

இந்தப் போரினால் மரியுபோல் நகர் பெரும் மனிதாபிமான பேரழிவை சந்தித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவின் முற்றுகைக்கு மத்தியில் குடிநீர், மின்சாரம், உணவு இன்றி ஆயிரக் கணக்கான மக்கள் நிலவறைகளில் சிக்கி உள்ளனர்.

தலைநகர் கியேவின் வடகிழக்கு மற்றும் வடமேற்கு புறநகர் பகுதிகளில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இரவு நேர ரொக்கெட் தாக்குதலுக்கு மத்தியில் நகரில் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளது. இதற்கிடையே உக்ரைனின் வடக்கில் இருக்கும் ஜெனீவா நகரில் நடந்த தாக்குதலில் 53 பேர் உயிரிழந்ததாக அந்நகரின் ஆளுநர் கூறினார். தலைநகர் கீயேவில் நடந்த ஏவுகணைத் தாக்குதலில் கட்டடம் ஒன்று கடுமையாகச் சேதம் அடைந்ததாக அதிகாரிகள் கூறினர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒரு போர்க்குற்றவாளி என்று சாடியுள்ளார். அது ஏற்றுக்கொள்ள முடியாத, மன்னிக்கமுடியாத வெற்றுப்பேச்சு என்று ரஷ்யா கூறியது.

## உக்ரைனில் இருந்து மீட்கப்பட்ட ஜம்மு–காஷ்மீர் மாணவன்; மோடிக்கு நன்றி தெரிவித்தார் தந்தை

உக்ரைன் பல்கலைக்கழக மாணவரான ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த துருவ், ஒபரேஷன் கங்கா மீட்புத் திட்டத்தின் கீழ் புதுடில்லிக்கு அழைத்துவரப்பட்டார். இதைப் பாராட்டிய அம் மாணவரின் தந்தை சஞ்ஜய் பண்டிதா, திரும்பி வரமாட்டார் என நம்பிக்கை இழந்த நிலையில் அவரை இந்திய அரசு உயிருடன் மீட்டு வந்ததால் தன் மகனை பிரதமர் மோடியின் மகனாகவே தான் கருதுவதாக உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஏஎன்ஐ செய்திச் சேவையிடம் தெரிவித்தார்.




சில தி னங்களுக்கு முன் புதுடில்லியை வந்தடைந்த இந்திய மீட்பு விமானத்தில் 242 இந்திய மாணவர்கள் அழைத்துவரப்ப ட்டிருந்தனர். மற்றொரு பல்கலைக்கழக மாணவரான ஹர்தீப் உக்ரைன் நிலைமைகள் தொடர்பாக குறிப்பிடும்போது, தான் நாடு திரும்பவுள்ள நிலையிலும் சுமி நகரில் குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்ததாகவும் எனினும் இந்திய தூதரகமும் செஞ்சிலுவை சங்கமும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்ததால் தமக்கு பிரச்சினை ஏற்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார். இந்தியாவின் ஒபரேஷன் கங்காவின் ஊடாக இதுவரை இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள் உக்ரைனில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

## மீள் உபயோக மின் உற்பத்தியில் இந்தியா 2030 இல் இலக்கை எட்டும்

### இந்திய அமைச்சர் தெரிவிப்பு

மீளவும் உபயோகிக்கக்கூடிய மின்சக்தி உற்பத்தியை 2030 ஆம் ஆண்டளவில் 450 கிகா வொட்ஸ் என்ற அளவுக்கு உயர்த்தும் இலக்கை இந்தியா அடையும் என்று இந்திய மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார். சூழல் மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கிளாஸ்கோ மாநாடு ஞாயிறன்று நடைபெறவுள்ளதையடுத்து அமைச்சர் இது தொடர்பாக இந்தியா ஆற்றவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக தகவல்கள் வெ ளியிட்டுள்ளார்.



சூழல் மாற்றம் தொடர்பான போராட்டத்தில் இந்தியா முன்நிலை வகிப்பதாகவும் 2030 இல் தன் இலக்கை அடையும் என்றும் குறிப்பிட்டுள்ளதோடு ஜி20 நாடுகளில் உறுதியான முன்னேற்றங்களை கண்டு வரும் நாடாக இந்தியா விளங்குகிறது என்றும் தெரிவித்துள்ளார். பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் எண்ணெய்க்கு மாற்றாக மின்சார உற்பத்திக்கான வளங்களைப் பயன்படுத்தி நாற்பது சதவீதமான மின் உற்பத்தி 2030 இல் பெறப்படும் என இந்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் மேலும் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் பாரதப் பிரதமர் நூறு கிகா வொட்ஸ் மீள் உபயோகிக்கும் மின்சக்தி உற்பத்திக்கான வசதியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறியுள்ளதையும் அவர் மேற்கோள் காட்டினார். மேலும் மேலதிக காடுகளை வளர்ப்பதன் மூலம் 2.5 பில்லியன் தொன்னாக கரியமில வாயு குறைக்கப்படும் என்றும் இந்தியா இலக்கை நிர்ணயித்துள்ளது.

## நியுசிலாந்தில் கரையொதுங்கிய 31 பைலட் திமிங்கிலங்கள் பலி



நியுசிலாந்து கடற்கரையில் கரையொதுங்கிய 31 பைலட் திமிங்கிலங்கள் உயிரிழந்துள்ளன. திமிங்கிலங்கள் இறக்கும் மோசமான இடம் என்று அறியப்படும் பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெற்கு தீவின் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு கடற்கரையில் இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை காண முடிந்ததாக வனவிலங்குத் துறை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் மீட்பாளர்களால் ஐந்து திமிங்கிலங்களை காப்பாற்றி கடலுக்கு மீண்டும் அனுப்ப முடிந்துள்ளது.

திமிங்கிலங்கள் கரையொதுங்கி இறக்கும் சம்பவங்களின் தொடர்ச்சியாகவே இது இடம்பெற்றுள்ளது.

திமிங்கிலம் கரை ஒதுங்குவது துரதிர்ஷ்டவசமானது என்றாலும், அவை இயற்கையான நிகழ்வு என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இவ்வாறு திமிங்கிலங்கள் கரையொதுங்குவதற்கான காரணம் தொடர்ந்து மர்மமாக உள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு நிகழ்ந்த மோசமான சம்பவத்தில் சுமார் 700 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கிய நிலையில் சுமார் 250 இறந்தன.

இந்தப் பகுதியில் கடந்த 15 ஆண்டுகள் திமிங்கிலங்கள் கரையொதுங்கிய 11 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தினகரன்

2022 மார்ச் 19 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

19 முதல் 20 வரை
சுபஹ் - 05.01
லுஹர் - 12.20
அஸர் - 03.33
மஃரிப் - 06.22
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் பங்குனி 5
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: மரண யோகம்
திதி: துவிதியை

**இராசி பலன்கள்**

மேஷம் - வெற்றி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - சுகம்
மகரம் - செலவு
கும்பம் - மறதி
மீனம் - பொறுமை

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

ஆட்சியை கவிழ்க்க எதிரணி படாதபாடு:

# போராட்டங்களை முன்னெடுத்து அரசை கவிழ்க்க முடியாது

## நாட்டின் நெருக்கடிக்கு அரசு காரணமல்ல



ஆட்சியை கவிழ்க்க படாதபாடுபடும் எதிரணியினரால் போராட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக ஆட்சியை கவிழ்க்க முடியாதென தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு எமது அரசு காரணம் அல்ல எனவும் தெரிவித்தார்.

எதிர்கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டங்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சியைக் கவிழ்க்க எதிரணியினர் படாதபாடுபடுகின்றனர். அவர்கள், தமது ஆதரவாளர்களை பஸ்களில் ஏற்றிவந்து ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட வைத்துள்ளனர். இதனால் என்ன பயனை அவர்கள் அடைந்தார்கள் எனவும் பிரதமர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிரணியினர், ஜனாதிபதியின் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் செய்வதால் எமது ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. ஏனெனில், 69 இலட்சம் மக்களின் ஆணையுடனேயே இந்த ஆட்சி அமைக்கப்பட்டது. இதை எதிரணியினர் கவனத்தில்கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு எமது அரசு காரணம் அல்ல. தற்போதைய எதிரணியினர் தான், கடந்த ஆட்சியில் நல்லாட்சி என்ற பெயரில் நாட்டைச் சீரழித்தனர்.

அதன் விளைவுகளை இன்று அனைவரும் அனுபவிக்கின்றோம். இதை எமக்கு ஆணை வழங்கிய 69 இலட்சம் மக்களும் புரிந்துகொள்வார்கள் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைவில் தீர்வு காணப்படும். ஜனாதிபதி இதில் உறுதியாகவுள்ளார் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தவக்கால சிந்தனை



## பிறரை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமை

ஒரு காலத்தில் தபால் தலைகளை சேகரிப்பது மாறுபட்ட வர்ணங்களைக் கொண்ட கற்களை சேகரிப்பது, கோழி இறக்கைகள், மயில் இறக்கைகளை சேகரிப்பது இதெல்லாம் மக்களுடைய பொழுது போக்காக இருந்தது.

இன்று பலருடைய பொழுது போக்காக இருப்பது பிறர் குற்றம் காண்பது. பிறருடைய குற்றங்களை ஆராய்வதுதான் இன்று சிலருக்கு ஆகச்சிறந்த பொழுது போக்காக இருக்கிறது.

பிறரை மனதார வாழ்த்த நம் எல்லோருக்கும் உரிமை உண்டு ஆனால் எந்த ஒரு மனிதனையும் குற்றம் கண்டுபிடித்து காயப்படுத்த நமக்கு உரிமை இல்லை. இன்று நம்முடைய தாயாம் திருச்சபையானது,'புனித யோசேப்பு மரியாவின் கணவர்' என்னும் விழாவைக் கொண்டாடுகிறது. யோசேப்புக்கும் மரியாவுக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது.

எனவே யோசேப்பு மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிட திட்டமிட்டார். அவர் நினைத்திருந்தால், இந்த நிகழ்வை யூத தலைமைச் சங்கத்திற்கு தெரியப்படுத்தி மரியாவிற்கு மரண தண்டனையை பெற்றுக்கொடுத்திருக்கலாம். இருந்தாலும் அவர் மரியாவை குற்றவாளியாக்க விரும்பவில்லை.

அவருடைய இதயத்தை காயப்படுத்த விரும்பவில்லை. எனவேதான் மறைவாக விலக்கிவிட திட்டமிட்டிருந்தார். அப்படிப்பட்ட சூழலில் ஆண்டவரின் தூதர் அவருக்கு கனவில் தோன்றி “ யோசேப்பே உன் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்று இருப்பது தூய ஆவியால் தான்.” என்று உணர்த்தப்பட்டார். அதன்பின்பு அவர் மரியாவை ஏற்றுக்கொண்டார். புனித யோசேப்பிடம் இருந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது பிறரை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் வாழ வேண்டும் என்பதைத் தான்.

அருட்தந்தை அருண்ரெக்ஸ்...

# பொலன்னறுவை மஜீ திய்யா மகளிர் அரபுக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

மாத்தளை சுழற்சி நிருபர்

பொலன்னறுவை மஜீதிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் 3 வது பட்டமளிப்பு விழா நாளை 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது

கல்லூரி அதிபர் எஸ்.எஸ்.எம். அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புருனை தாருஸ்ஸலாம் (உசுழுத்தீன்) பீடம் சுல்தான் (ஷரீஃப் அலி) முன்னாள் பீடாதிபதி எம்.எம். அபுவர்தீன் பிரதம அதிதியாகவும் சின்பா ஹோல்டிங் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என். காதர் விசேட அதிதியாகவும் பொலன்னறுவை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை தலைவர்

06



அரசாங்கத்தால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'அசி திசி' இலவச காப்புறுதி திட்டத்தில் திடீர் மரணத்துக்காக முதலாவது இழப்பீட்டுத் தொகை கடந்த 16 ஆம் திகதி வழங்கப்பட்டது. கொவிட்19 காரணமாக மரணமடைந்த பிரதேச ஊடகவியலாளர் சுனில் பந்தேவிதானவுக்கான இழப்பீட்டுத் தொகையான 5,50,000 ரூபா பெறுமதியான காப்புறுதி ஆவணத்தை அவரது மனைவியிடம் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும கையளித்தார். அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவும் இதன்போது கலந்துகொண்டார்.

# 40,000 மெற்றிக் தொன் டீசல் நாளை இலங்கை வருகிறது

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் இரண்டு தினங்களில் முற்றாக நீங்குமென பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கை- இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கவுள்ள முதலாவது தொகை டீசல் நாளை ஞாயிற்றுக்கிழமை நாட்டை வந்தடையுமென கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

எரிபொருளை தாங்கிய கப்பல் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடையுமென தெரிவித்துள்ள அவர், அந்தக் கப்பலில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் காணப்படுவதாகவும் அந்த டீசல் கப்பலிலிருந்து விடுவிக்கப்பட்டு பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்ததும் தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும்

06


# வவுனியா சிறையில் கைதி தப்பியோட்டம்

வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் நேற்று அதிகாலை தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின் பேரில் வவுனியா கூமாங்குளத்தினை சேர்ந்த 20 வயது இளைஞரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று அதிகாலை நேரத்தில் சிறைச்சாலையிலிருந்து தப்பித்து சென்றதால் இக்கைதியைத் தேடி வவுனியா சிறைக்காவலர்கள் வவுனியா பொலிசாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'இலங்கை மக்களின் தேவைகளுக்கு இந்தியா நிச்சயம் மதிப்பளிக்கும்'



இலங்கை மக்களின் தேவைகளுக்கும், நிலைப்பாடுகளுக்கும் இந்தியா தொடர்ந்து மதிப்பளித்து வருகிறது என இந்திய வெளியுறவு துறை அமைச்சர் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார்.

நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவிற்கும், இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு புதுடெல்லியில் இடம்பெற்றது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருதரப்பு பொருளாதார பங்காளித்துவம் குறித்து ஆக்கபூர்வமாக கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது இலங்கை மக்களின் தேவைகளுக்கும், நிலைப்பாடுகளுக்கும் இந்தியா தொடர்ந்து மதிப்பளித்து வருகிறது என இந்திய வெளியுறவு துறை அமைச்சர் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சின் செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஸ்ரிங்காவிற்கும் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பின் போது, கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார நிலைமை, கொவிட் பெருந்தொற்று கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

06



நாட்டிலுள்ள நிர்மாணத்துறையினரை ஊக்குவிக்கும் நோக்கில் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் build Srilanka International Exibition 2022 கண்காட்சி நேற்று ஆரம்பமானது. நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி ஷப்ரி தலைமையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கண்காட்சி மண்டபத்தில் ஆரம்பமாகிய இக்கண்காட்சியை அமைச்சர் பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

# 20 சதவீதமான தனியார் பஸ்களே சேவையில்!

## மேலும் மட்டுப்படுத்தப்படும் நிலை ஏற்படும்



எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரை தனியார் பஸ் சேவை மட்டுப்படுத்தப்படும்.

மேலும் எதிர்வரும் நாட்களில் தூர பிரதேச தனியார் போக்குவரத்து சேவை ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்படும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை தனியார் பஸ் சேவை மட்டுப்படுத்தப்படும்.

தற்போது 20 சதவீதமான பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன .எதிர்வரும் நாட்களில் தூரபிரதேச தனியார் பஸ் சேவையையும் ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

# உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரிப்பு

உக்ரைனில் போர்நிறுத்தம் ஏற்படும் என்ற நம்பிக்கை பொய்த்து போனதால் நேற்று உலகில் எண்ணெய் விலை சுமார் 10 சதவீதம் உயர்ந்தது.




அதன்படி, ப்ரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 8.55 டொலர் அதிகரித்து, 107 டொராக இருந்தது.

அத்துடன், ஒரு பீப்பாய் அமெரிக்க WTI மசகு எண்ணெயின் விலை 8 டொலர் அதிகரித்து 104 டொலராக ஆக உயர்ந்துள்ளது.

# நீர்க் கட்டணம் செலுத்தாவிட்டால் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஆறு மாதங்கள் மற்றும் ஒரு வருடங்கள் தொடர்ச்சியாக நீர் கட்டணத்தை செலுத்த தவறியவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அதற்கிணங்க அவ்வாறானவர்களுக்கு நீரை துண்டிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் சபையின் உயர் அதிகாரியொருவர் நேற்று தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டில் நிலவிய கொரோனா சூழ்நிலை காரணமாக கொரோனா ஆரம்பம் முதலே நீர் துண்டிப்பை மேற்கொள்வதில்லை என தற்காலிக தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனால் வாடிக்கையாளர்களிடமிருந்து நீர் கட்டணமாக 7.5 பில்லியன் ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளதாகவும் சபையின் பிரதி முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த பத்து வருடங்களாக நீர் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்றும் தற்போது நீர் கட்டணத்தை அதிகரிப்பதற்கான தேவை எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ)

# தங்கத்தின் விலை ரூ.160,000 ஆனது



இலங்கையில் தங்கத்தின் விலை எதிர்பாராத விதமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தங்கத்தின் விலை நேற்று மேலும் அதிகரித்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெரு தங்க ஆபரண வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதன்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 160,000 ரூபாவாகவும் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 148,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| யூரோ | 278.29 | 288.81 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் பங்குனி மாதம் 05ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 15

### குறள் தரும் சிந்தனை



இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

மமதையால் பூரித்துப் போய்க் கடமைகளை மறந்திருப்பவர்கள், அப்படி மறந்து போய் அழிந்து போனவர்களை நினைத்துப் பார்த்துத் திருந்திக் கொள்ள வேண்டும்.

## கடந்த கால யதார்த்தத்தை மறந்த நிலையில் எதிரணி!

உலகளாவிய கொவிட் பெருந்தொற்றின் பேராபத்தில் இருந்து அனைத்து நாடுகளும் பெருமளவில் மீண்டுள்ளன. இலங்கையும் கொவிட் தொற்றின் பாரதூரமான பாதிப்புகளிலிருந்து பெருமளவில் மீண்டுள்ளது. அன்றாடம் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கொவிட் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் குறைந்திருக்கின்றது. நாட்டில் தற்போது சுமுகநிலைமை திரும்பியுள்ளதைப் போன்ற தோற்றமே காணப்படுகின்றது.

பெருந்தொற்றின் ஆபத்தான கட்டத்திலிருந்து எமது நாடு மீண்டு விட்டதென்ற கருத்துகளை மருத்துவ நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர். எதிர்காலத்தில் மற்றொரு கொவிட் அலை தலைதூக்குவதற்கு வாய்ப்பில்லையென்ற நம்பிக்கையே தென்படுகின்றது. ஆனாலும் மக்கள் அலட்சியமாக இருந்து விட முடியாதென மருத்துவ நிபுணர்கள் அடிக்கடி எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். கொவிட் தொற்று தணிந்துள்ள போதிலும், மக்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென்பதே மருத்துவர்களின் அறிவுரையாக உள்ளது.

கொவிட் வைரஸில் புதிய புதிய திரிபுகள் உருவாகிக் கொண்டிருப்பதனால், உலக மக்கள் அனைவரும் எதிர்காலத்தில் அவதானமாக செயற்படுவதே பாதுகாப்பாகுமென்று அவர்கள் கூறுகின்றனர். அதன் காரணமாகவே மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். சீனாவில் தற்போது கொவிட் வைரஸின் புதிய திரிபொன்று வெளிப்பட்டுள்ளதை இதற்கான உதாரணமாக நாம் கொள்ள முடியும். சீனா தற்போது விழிப்படைந்து விட்டது. அந்நாட்டில் கொவிட் கட்டுப்பாடுகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்நாட்டில் புதிய திரிபை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாமென்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

இவ்வாறான நிலையில் எமது நாட்டு மக்களும் விழிப்புணர்வு பழக்கவழக்கங்களை அலட்சியம் செய்து விட முடியாது. உலகை விட்டு கொவிட் வைரஸ் முற்றாக விடைபெறும் நாள் வரை மக்கள் அனைவரும் விழிப்புணர்வு கட்டுப்பாடுகளை தொடர்ந்து பேண வேண்டுமென்பதே பொருத்தமானதாகும். இல்லையேல் மீண்டும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இந்த விடயத்தில் மக்கள் மத்தியில் அலட்சியம் கூடாது.

கொரோனா அலைகளுக்கு எமது நாடு இனிமேலும் முகம் கொடுக்கும் நிலைமைக்கு இடமளிக்கலாகாது. கொவிட் தொற்று காரணமாக சுமார் இரு வருட காலம் நாம் பலவிதமான துன்பங்களை அனுபவித்து விட்டோம். ஏராளமான உயிர்களை நாடு பறிகொடுத்து விட்டது. நாட்டின் முடக்கநிலைமையினால் வீழ்ச்சிக்குச் சென்றுள்ள பொருளாதாரம் இன்னும் முன்னைய நிலைமைக்குத் திரும்பவில்லை. அரசாங்கத்தின் வருமானம் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. ஒவ்வொரு குடும்பத்தினதும் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது. தொழில்துறைகள் இன்னுமே முன்னைய நிலைமைக்குத் திரும்பவில்லை. இந்நிலையில் மீண்டுமொரு கொவிட் தொற்று பரவலை நாடு சந்திக்கும் நிலைமை ஏற்படுவது நல்லதல்ல.

அதேசமயம் கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை சுலபமாக விபரித்து விட முடியாது. அரசாங்கம் இன்று நிதிநெருக்கடியில் உள்ளமைக்கு கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதி வாரியிறைக்கப்பட்டதுதான் பிரதான காரணமாகும்.

இலங்கையில் கொவிட் தொற்று முதன் முதலாகத் தோற்றம் பெற்றதுமே அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது. அவசர அவசரமாக கொவிட் மருத்துவ பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. தொற்றுக்கு உள்ளானோருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வந்தன. நாடு முடக்கநிலையில் இருந்ததால் குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கொவிட் தொற்றுக்கு உள்ளானோரின் குடும்பத்துக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வீதிகள், பொதுஇடங்கள், பொதுப்போக்குவரத்து வாகனங்கள் போன்றவை பெரும் செலவில் தொற்றுநீக்கம் செய்யப்பட்டன. இவ்வாறு பணிகளை மேற்கொண்டு வந்ததன் காரணமாக பெருமளவு நிதியை அரசாங்கம் செலவிட வேண்டியிருந்தது. அதுமாத்திரமன்றி நாடு பல மாதங்களாக முடக்கநிலையில் இருந்த போதிலும், அரசாங்க ஊழியர்களுக்கான மாதாந்த வேதனத்தை அரசாங்கம் எதுவித தடையுமின்றி தொடர்ந்தும் வழங்கி வந்தது. அதாவது அரசாங்கத்தின் வருமானம் முடங்கியிருந்த போதிலும், அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குவதையோ அல்லது கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையோ அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவில்லை.

நாட்டின் தேசிய வருமானம் முடங்கியிருந்த போதிலும், மக்களின் நலன் பேணும் பணிகளை அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவேயில்லை. அரசாங்க நிதி பெருமளவில் செலவிடப்பட்டதனாலேயே நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதென்பதை எவரும் மறந்து விட முடியாது. ஆனால் எதிரணியினர் இன்று அனைத்தையும் மறந்த நிலையிலேயே அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றனர். கொவிட் பெருந்தொற்றுக்கு மத்தியிலும், மக்களின் நலன்களைப் பேணுவதில் அரசாங்கம் பெரும் அர்ப்பணிப்பை மேற்கொண்டு செயலாற்றியதை மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் எதிரணியினர் அனைத்தையும் மறந்தவர்களாக மக்களைத் திசைதிருப்பும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதில் இந்தியா ஆர்வம்



## இராமயண தடங்கள் மீதான கருத்தரங்கில் பிரதி உயர் ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே ஜேக்கப்

இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு இந்தியா ஆர்வமாகவே உள்ளதென்று இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் இலங்கைஇந்திய சங்கம் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஆகியவற்றால் நடத்தப்பட்டிருந்த 'இராமாயண தடங்கள்' குறித்த கருத்தரங்கில் பிரதி உயர் ஸ்தானிகர் ஸ்ரீ வினோத் கே ஜேக்கப் உரை நிகழ்த்தியிருந்தார். அந்த உரையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி உயர் ஸ்தானிகர் தனது உரையில் "இலங்கை இந்தியா இடையிலான கலாசார உறவுகள் மற்றும் வலுவான மக்கள் தொடர்புகள் பன்னெடும் காலமாக தொடர்ந்து வருகின்றன. அத்துடன் இந்த அடிப்படையில் 2021 ஏப்ரலில் இந்தியா மற்றும் இலங்கை இடையிலான காற்றுக்குமுளி நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அதேபோல சுற்றுலாத்துறை குறித்த மூன்றாவது கூட்டு பணிக்குழுவின் சந்திப்புகளை நடத்தியமை மற்றும் 2021 ஒக்டோபரில் குஷி நகருக்கான விமான சேவையை இலங்கையிலிருந்து ஆரம்பித்திருந்தமை ஆகிய விடயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்" என்று தெரிவித்தார்.

"சுற்றுலாத்துறை சந்தைக்கான மிகவும் முக்கியமான தளமாக இலங்கையை இந்தியா கருதும் அதேவேளை மீண்டும் இலங்கை சுற்றுலாப்பயணிகளை வரவேற்பதற்கு இந்தியா தயார் நிலையில் உள்ளது. அதேபோல சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதற்காக தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றவர்களுக்கு இந்திய அரசாங்கமானது அண்மையில் RTPCR பரிசோதனைக்கான தேவையினை இடைநிறுத்தியுள்ளது. அத்துடன் 2022 மார்ச் 27ஆம் திகதி முதல் சர்வதேச வர்த்தக விமானங்களின் சேவைகளை மீள ஆரம்பிக்கும் அறிவித்தலும் இந்தியாவினால் விடுக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் கொவிட் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் 1.94 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இவர்களில் 56,268 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதும் மொத்த வருகையின் 29 வீதமான பங்கினை அவர்கள் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயம்" என்றும் பிரதி ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

"இந்த இலக்கங்களை அதிகரிப்பதற்கான முயற்சிகள் இலங்கை தரப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த இரு மாதங்களில் 7682 சுற்றுலாப் பயணிகள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு பயணித்துள்ளனர். அதேசமயம் 196 பேர் மருத்துவ தேவைகளுக்காக இந்தியாவுக்கு பயணித்துள்ளனர்" என்றும் பிரதி உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

"2019 இல் இந்தியாவுக்கு 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் சென்றிருந்த சாதனையை எட்டுவதற்கான முயற்சிகளை தொடர வேண்டிய தேவை காணப்படுகின்றது. இந்நிலையில் இந்தியாவில் உள்ள வாய்ப்புகளிலிருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான சிறந்த தருணத்தை தற்போது இலங்கையிலுள்ள சகல தரப்பினரும் கொண்டிருப்பதுடன் இவ்விவகாரத்தில் இந்திய பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொள்ளுதல், அதேபோல பொலிவூட்டில் இலங்கை கலைஞர்களின் பங்களிப்பு, முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் வகிபாகம் ஆகியவற்றை உதாரணமாக குறிப்பிட முடியும்" எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிகழ்வின் போது இலங்கையில் உள்ள இராமாயண தடங்கள் தொடர்பான ஒரு விளக்கக்காட்சியும் சபையோருக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், இது இந்திய சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்திற்கு ஏதுவாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை சுற்றுலாப்பயணிகளை வரவேற்பதற்கும் இந்தியா தயார்

# சமய, சமூகப் பணிகளில் ஈடுபாடு காட்டி வரும் சீனன்கோட்டை பாரூக்

கல்வி, சமூகநலத் துறைகளில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வருகின்றார் சீனன்கோட்டை பாரூக் அவர்கள். அன்றைய முஸ்லிம் தலைவர்களான சேர் மாக்கான் மாக்கார், என். டீ. எச். அப்துல் கபூர் போன்றோருடன் இவரது குடும்பத்தினர் நெருங்கிய வர்த்தக உறவுகளை வைத்திருந்தனர். இவர் சீனன் கோட்டை அப்துல் ரஹீம் ஆமினா உம்மா தம்பதியின் புதல்வராக 1938 நவம்பர் 22 ஆம் திகதி பிறந்தார்.

அப்போதைய அரசினர் ஆண்கள் பாடசாலையாக விளங்கிய இன்றைய அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 1944 ஆம் ஆண்டு கல்வியைத் தொடர்ந்தார். அங்கு சிரேஷ்ட பாடசாலை தராதரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். 1959 ஆம் ஆண்டு இவருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இவர் ஆசிரியர் பதவியை ஏற்காது இரத்தினக்கல் வர்த்தகத்திலேயே தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

பிரதேசத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு இயன்றவரையும் கைகொடுத்து வந்தார். 1960 ஆம் ஆண்டிலேயே சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட ஆரம்பித்தார். வறிய கிராமங்களிலுள்ள பள்ளிவாசல்களை புனரமைப்பதிலும் புதிதாக பள்ளிவாசல்களை நிர்மாணித்துக் கொடுப்பதிலும் பாடுபட்டு வந்தார். 1960 ஆம் ஆண்டு கஹவத்தையில் சுமார் 400 வருடங்கள் பழைமை வாய்ந்த சிறிய அளவிலான பள்ளிவாசலை புனர்நிர்மாணம் செய்து கொடுப்பதில் முன்னின்று பணியாற்றியுள்ளார்.



ஷாதுலிய்யா தரீக்காவின் அப்போதைய உலக ஆன்மீகத் தலைவராக இருந்த மர்ஹூம் அஷ்செய்கு அல் பாஸி மேற்படி பள்ளி புனரமைப்புக்கான அடிக்கல்லை நாட்டி பணியை ஆரம்பித்து வைத்தார். இன்று வரை நளீமிய்யா கலாபீடத்துடனான பங்களிப்பை தொடர்ந்து கொண்டு வருகிறார். இலங்கை முஸ்லிம்களில் இவரே 1995 ஆம் ஆண்டில் இரத்த தானம் செய்து முன்மாதிரி காட்டியுள்ளார். சீனன் கோட்டை இணக்கசபையில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி பிணக்குகளை மிகவும் சுமுகமாக தீர்த்து வைத்து நல்லபிமானத்தைப் பெற்றுள்ளார். பிட்டவல அல் மிர்ரத்துல் ஷாதுலிய்யா ஸாவிய்யா பரிபாலன கமிட்டியில் சுமார் 32 வருடங்கள் பணியாற்றியுள்ளார். பிறமதத் தலைவர்களுடனும் நெருங்கிப் பழகி இன, மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருகிறார். முஸ்லிம் ஜனாஸாக்களை இலகுவாக விடுவித்து துரிதமாக நல்லடக்கம் செய்வதிலும் சேவை செய்து வருகிறார். மர்ஹூம்களான பாக்கீர் மாக்கார், எஸ். எம். ஜாபிர், பளீல் மற்றும் மர்ஜான் பளீல் போன்ற அரசியல் தலைவர்களுடனும் இணைந்து ஊருக்கான சேவைகள் இடம்பெற ஒத்துழைத்தார்.

பள்ளிவாசல் நிர்மாண புனரமைப்புப் பணிகளில் குறிப்பாக புத்தளம் நகரில் சிறிய பள்ளியை பாரியளவில் மாற்றி அமைத்து அதனை ஜும்ஆப் பள்ளியாக 'வக்ப்' செய்து கொடுப்பதிலும் இவர் பணியாற்றியுள்ளார். குருநாகல அக்கரபன காணிக்கு அடுத்துள்ள இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறிய தக்கியர் குருநாகல போரப்பிட்டியவில் பழைமையான பள்ளி புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவோடு ஜும்ஆப் பள்ளியாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

வலிக்கந்தையிலிருந்து சுமார் 14 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஜும்ஆப்பள்ளி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள கட்டகலியாவயில் பள்ளி புனரமைக்கப்பட்டு பெரிய ஜும்ஆப்பள்ளியாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. குருணாகல் மாவட்டத்தின் துத்திரிப்பிட்டியவில் இருந்த சிறிய தக்கியாவை பெரியளவிலான பள்ளியாகக் கட்டி அங்கு ஜும்ஆவும் இடம்பெற வழி செய்யப்பட்டது. ஹம்பாந்தோட்டை 'சுசி' என்ற காட்டுப்பகுதியில் ஜும்ஆத் தொழுகை இடம்பெறும் வகையில் புதிய பள்ளியொன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பள்ளிவாசல்கள் உள்ளிட்ட சமய, சமூக, கல்வி போன்ற பணிகள் பலவற்றையும் நிறைவேற்றிக் கொடுப்பதில் இவர் பணியாற்றியுள்ளார்.

பேருவளை **பீ.எம்.முக்தார்...**

# தன்னலம் கருதாமல் கல்விச் சேவை புரிந்து ஓய்வு பெற்றுள்ள உதவி அதிபர் எம்.ஏ.நிசாம்

தொழிலை சிறந்த முறையில் செய்வதே என் இலட்சியம் என்ற குறிக்கோளுடன் தனது ஆசிரிய சேவையை 32 வருடங்களாக மேற்கொண்டு வந்தவர் அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் உதவி அதிபர் மீராலெவ்வை ஆலிம் நிசாம். அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் சேவையாற்றி ஓய்வு பெறும் ஆளணியினருக்கான பிரியாவிடை வைபவத்தின் போது பாடசாலை நலன்புரி அமைப்பினால் ஒரு தொகை நிதி அடங்கிய பொற்கிளி கையளிக்கப்படுவது வழமையாகும். அந்த வகையில் ஓய்வு பெற்ற உதவி அதிபர் எம்.ஏ.நிசாமுக்கு அப்பொற்கிளி கையளிக்கப்பட்ட போது, அதனை அவர் பெற்றுக் கொள்ளவில்லை. இப்பணத்தொகையினைக் கொண்டு பாடசாலை மாணவர்களின் நலன்புரிக்கான நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதற்கட்ட பணமாக பாடசாலை நிருவாகம் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். அவ்வாறான முன்மாரிதிச் செயற்பாட்டினை இப்பாடசாலை வரலாற்றில் செய்து காட்டியவர் உதவி அதிபர் எம்.ஏ.நிசாம்.

அவர் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றில் 1961 டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அக்கரைப்பற்று அல்முனவ்வறா வித்தியாலயம், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் அவர் பெற்றுக் கொண்டார். அவர் மாணவர் தலைவராக சிறந்த முறையில் செயற்பட்டது மட்டுமல்லாது பாடசாலை மட்டங்களில் பல்வேறு குழுக்களிலும் அங்கம் வகித்து சிறந்த முறையில் செயற்பட்டு வந்தார். இலங்கை ஆசிரியர் சேவையின் முதல் தர ஆசிரிரான இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராவார். 1990.03.22 ஆம் திகதி அக்கரைப்பற்று அர்ரஹ்மிய வித்தியாலயத்தில் முதல் நியமனம் பெற்று ஆசிரியராக இணைந்து கொண்ட இவர், 1991.04.09 வரை இப்பாடசாலையில் சேவையாற்றினார். இதனைத் தொடர்ந்து 1991.04.10 முதல் 2021.12.29 வரை குறிப்பாக ஓய்வு பெறும் காலப் பகுதி வரை அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் தொடர்ச்சியாக சேவை ஆற்றியிருந்தார்.



இவர் அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் இணைந்து கொண்டது முதல் ஓய்வு பெறும் காலம் வரை பல்வேறு சேவைகளை பாடசாலை நலனை கருத்திற் கொண்டு மேற்கொண்டிருந்தார். இப்பாடசாலையின் விடுதி பொறுப்பாசிரியராகவும், வலயத் தலைவராகவும், வகுப்பாசிரியராகவும், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும், மாணவர் நலன்புரி வழிகாட்டல் பொறுப்பாசிரியராகவும் இருந்து மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதில் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வந்தார். எம்.ஏ.நிசாம் கல்விச் செயற்பாடுகளுக்கு மேலாக சிறந்ததோர் சமூக சேவையாளராகவும் உள்ளார்.

'புளட்ஸ்' கழகத்தில் இணைந்து கொண்டு இளைஞர்களின் விளையாட்டுத் துறைசார் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பல வருட காலமாய் இவர் செயற்பட்டுள்ளார். இக்கழகத்தின் செயலாளராகவும், கல்வி கலாசாரப் பிரிவுத் தலைவராகவும், சமூக சேவைப் பிரிவுத் தலைவராகவும் இருந்து இப்பிராந்திய இளைஞர்களின் துறைசார் விருத்தியில் கரிசனை கொண்டு செயற்பட்டுள்ளார்.

இதேவேளை, அக்கரைப்பற்று மத்தியஸ்த சபையில் கடந்த பல வருடங்களுக்கு மேலாக சபை உறுப்பினராக இருந்து வருகின்றார். 'ஹிறா' ஆங்கில கல்வி நிறுவனத்தின் நிருவாக கட்டமைப்பின் நீண்ட கால செயலாளராக பணியாற்றி வருகின்றார். இவரின் சேவைகளை இப்பிரதேச கல்விச் சமூகம் மெச்சிப் பாராட்டி வருகின்றது.

**எம்.ஏ.றமீஸ்...**
(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

# கொவிட் தொற்று சூழலில் அரசை நடத்துவதென்பது பெரும் சவால்!

**கொவிட் தொற்று காரணமாக எமது நாடு மட்டுமன்றி, உலக நாடுகள் அனைத்துமே பாதிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் அரசாங்கத்தை நடத்துவது என்பது பெரும் சவாலாகும் என்று இளைஞர்,விளையாட்டுத் துறை மற்றும் அபிவிருத்தி தொடர்பான கண்காணிப்பு அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொவிட் தொற்று நிலைமை காரணமாக தற்போது இலங்கை பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அவ்வாறான நிலைமையில் நாட்டில் மக்களுக்கு சலுகைகளை வழங்கி முன்னோக்கி பயணிப்பதற்கு எடுக்க வேண்டிய முடிவுகள், இதுவரை அரசாங்கம் மேற்கொண்ட வேலைத்திட்டங்கள், தற்போது செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றி, முன்னோக்கி பயணிக்கும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ எமக்கு பேட்டி அளித்தார்.

கேள்வி: அபிவிருத்தி தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு அமைச்சு ஜனாதிபதியால் நிறுவப்பட்ட புதிய அமைச்சாகும். அந்த அமைச்சின் புதிய விடயப் பரப்பு மற்றும் கடமைகள் என்ன?

பதில்: தற்போது எமது நாட்டில் பாரிய அளவில் அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று கிராமிய மட்டத்திலும் சிறிய அளவிலான அபிவிருத்தி யோசனை திட்டங்கள் 25,000 30,000 வரையானவை வருடாந்தம் செயல்படுத்தப்படுகின்றன. சில ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு பல வருடக்கணக்கானாலும் திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை. திட்டமுகாமையாளர் இருக்கின்றார். சம்பளம் வழங்கப்படுகின்றது.அரசாங்கம் கடன் மற்றும் வட்டியை வழங்க வேண்டியுள்ளது. இவற்றை விரைவுபடுத்துவதையே அபிவிருத்தி தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு அமைச்சு எதிர்பார்க்கின்றது.

கேள்வி: தற்போது நாடு பூராவும் பல அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது எமது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்காக செயல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் எவை?

பதில்: ஒரு இலட்சம் வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டில் அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறன. அதே போன்று அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 40 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது வீதத்தை தொழில் முனைவோர் அபிவிருத்திக்காக முதலீடு செய்யுமாறு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எழுத்து மூலம் அறியத் தந்துள்ளார். இதன் மூலம் நாட்டில் நிதி பரிமாற்றம் நடைபெறும். தேசிய உற்பத்தி பொறிமுறைக்கு பங்களிப்பு கிடைக்கும். அதே போன்று கிராமங்களுக்கு பொருளாதார ரீதியாக ஏதேனும் நன்மைகள் கிடைக்கும் விதத்தில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கிராமங்களுக்கு பணம் சென்றால் ,கிராமங்களுக்கு பாதைகளை உருவாக்கப்பட்டால், கிராம தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டால்தான் கிராமத்து பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கிராம மக்களுக்கு கிடைக்கும் வருமானத்தின் பேரில் சீவிக்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் நாட்டில் உள்ளார்கள். இச்சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சுக்கு எவ்வளவு நிதி நெருக்கடி காணப்பட்டாலும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்கும்படி நிதி அமைச்சர் அந்த அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



கேள்வி: 'கிராமத்துடனான கலந்துரையாடல்' அபிவிருத்தி வேலைத் திட்டம் தற்போது நாடு பூராவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டத்தின் முன்னேற்றம் எவ்வாறுள்ளது?

பதில்: தற்போது அத்திட்டம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 17 மாவட்டங்களில் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அங்கு கிராம மக்கள், அதிகாரிகள் போன்று பிரதேச அரசியல்வாதிகளையும் சந்தித்து அவர்களின் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். 17 மாவட்டங்களிலும் அநேகமாக வேலைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளன. அநேகமான சந்தர்ப்பங்களில் நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. சட்டங்கள், ஒழுங்கு முறைகள், பாராளுமன்ற சட்டங்கள் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதேபோன்று காடுகள் தொடர்பாக காணப்படும் நிலைமையையும் காணி உரிமை தொடர்பாக காணப்படும் நிலைமையையும் தீர்ப்பதற்கு சில காலம் எடுக்கும்.

## 'அரசாங்கத்தை சீராக நடத்தும் போது சில கஷ்டமான முடிவுகளையும் எடுக்க வேண்டியுள்ளது. கொள்கை ரீதியாக கருத்து மோதல் ஏற்பட்டால் அரசாங்கத்தின் இருப்புக்காக நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடுகின்றது'

கேள்வி: இன்று நாட்டில் நிதி நெருக்கடி உருவாகியுள்ளது. இந்த நிலைமையில் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல எவ்வாறாயினும் அந்நிய செலாவணியை பெறுவதற்கு வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அதற்காக அரசாங்கத்தின் திட்டங்கள் எவை?

பதில்: முதலில் நாங்கள் நாட்டில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இது உலகளாவிய தொற்று காரணமாக ஏற்பட்ட பிரச்சினையாகும். விநியோகச் சங்கிலியில்தான் பிரச்சனை உள்ளது என எண்ணுகிறேன். அதில் பாதிப்பு ஏற்படும் போது கப்பல் கட்டணம், துறைமுகக் கட்டணம் அதிகரிக்கும். பொருளாதாரம் வீழ்ச்சியடையும், விநியோகம் குறைந்தால் கியூ வரிசைஅதிகரிக்கும். இவை அனைத்துடனும் பல வருடங்களாக தொடர்ந்து வந்த பிரச்சினைகளுடன் இன்று உலகில் பல நாடுகள் பாரிய பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளன. எமது நாட்டில் முதலில் செய்ய வேண்டியது கிராமிய உற்பத்தியை அதிகரிப்பதாகும்.

சலுகைகள் அதிகளவு வழங்கப்பட்டுள்ளன. விசேடமாக தகவல் தொழில்நுட்பத் துறையில் அடுத்த ஐந்து வருட காலத்துக்குள் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம். கைத்தொழில் துறையில் உற்பத்தி பொருளாதாரத்தின், ஏற்றுமதி அளவை அதிகரித்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை நாம் செயற்படுத்தி வருகின்றோம். கடந்த காலங்களில் ஏற்றுமதி கைத்தொழில் மற்றும் தேசிய கைத்தொழிலை விசேடமாகக் கருதி தடுப்பூசி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டதால்தான் கைத்தொழில்கள் பாதுகாக்கப்பட்டன.

மறுபுறம் சுற்றுலாத் துறையை எடுத்துக் கொண்டால் தற்போது பெருமளவு புத்துயிர்ப்பு பெற்றுள்ளது. உக்ரைன்,ரஷ்ய உல்லாச பயணிகளை இலங்கைக்கு அழைத்து வந்த போது எதிர்க்கட்சியினர் எம்மீது சேறு பூசினார்கள். ஆனால் தற்போது ரஷ்யாவிலிருந்தும் உக்ரைனிலிருந்தும் இலங்கைக்கு அதிகளவான உல்லாசப்பயணிகள் வருகை தந்ததாக எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அந்நிய செலாவணி அதிகரிப்பதற்கு தேவையான வேலைவாய்ப்புகளை இந்நாட்டு இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்க பயிற்சிகள் அளிப்பது தொடர்பாகவும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். மூன்று இலட்சம் இலக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

'Hope for Sri Lanka' என்னும் வேலைத் திட்டம் ஒன்றை நாம் ஏற்பாடு செய்துள்ளோம். விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அதற்கு தலைமை வகிக்கின்றனர். தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. இதன் மூலம் இந்நாட்டு இளைஞர், யுவதிகளை வேலைவாய்ப்பு சந்தையில் இணைக்கவுள்ளோம்.

கேள்வி: தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்காக நாட்டின் எதிர்காலத் திட்டங்களை முன்வைத்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் கொவிட்19 தொற்று ஏற்பட்டது. இந்நிலைமை அரசாங்கத்தினதும் மற்றும் நாட்டினதும் எதிர்கால பயணத்திற்கு பாரிய சவால் அல்லவா?

## 'எத்தகைய சவால் வந்தாலும், நாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மக்களின் பக்கம் இருப்போம். மக்களின் பக்கமிருந்தே நாம் முடிவுகளை எடுக்கின்றோம்'

பதில்: எந்த ஒரு காலப் பகுதியிலும் அரசாங்கத்தை நடத்துவது சவாலே ஆகும் .தொற்று காலத்தில் அரசாங்கத்தை நடத்துவது பெரும் சவால். நாம் கொள்கைப் பிரகடனத்தை தயாரிக்கும் போது இந்த தொற்று நிலைமை காணப்படவில்லை. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே இந்த சவாலுக்கு முகம் கொடுத்தது. எத்தகைய சவால் வந்தாலும் நாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் மக்களின் பக்கம் இருப்போம்.மக்களின் பக்கமிருந்தே நாம் முடிவுகளை எடுக்கின்றோம். ரூபாவை மிதக்க விடும் படி அநேகமானோர் கூறினார்கள். இரண்டு கருத்துகள் காணப்பட்டன. பொருளாதார நிபுணர்களில் ஒரு பகுதியினர் அதனை மிதக்க விடும்படியும், இன்னொரு பகுதியினர் அவ்வாறு செய்ய வேண்டாம் என்றும் கூறினார்கள். ஆனால் நாம் மக்களின் பக்கத்திலிருந்து சலுகைகளை பெற்றுக் கொடுக்கவேண்டும். அதனால் நிலைமையை தடுக்க முயற்சி செய்தோம். ஒரளவு ரூபாவை மிதக்க விட முடிவு எடுத்தோம். ஒரு அரசாங்கமாக மக்களின் உரிமைக்காகவே ஆஜராக வேண்டும்.

கேள்வி: தகவல் தொழில்நுட்பத்தால் இலங்கையை பூரணப்படுத்தும் திட்டம் ஒன்று தற்போது அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தால் இலங்கையை வலுப்படுத்த செயல்படுத்தப்படும் திட்டங்கள் எவை?

பதில்: கிராமத்துக்கு தொடர்பாடல் திட்டத்தினூடாக எதிர்வரும் 2023ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் நாட்டில் அனைத்து கிராமங்களையும் இணைக்க எதிர் பார்த்துள்ளோம்.அதேபோன்று நாட்டில் பத்தாயிரம் பாடசாலைகளை இணைக்கவுள்ளோம். மக்கள் சேவை அனைத்தையும் ஒரே மேடைக்கு கொண்டுவர எதிர்பார்த்துள்ளோம். அது விசேடமாகும். காரணம் உலகில் தற்போது பாவிக்கப்படும் உயர்ந்த தொழில்நுட்பத்தை நாம் பாவிக்கின்றோம். அதன் மூலம் இந்நாட்டு மக்களுக்கு தொடர்ந்தும் அரச சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு தாமதம் ஏற்படாது. தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்பு சட்டம் வந்துள்ளது. சைபர் பாதுகாப்பு சட்டம் வர வுள்ளது. இணையத்தளம் ஊடான தவறான நடவடிக்கைகளை தடுக்க சட்டம் ஒன்றையும் கொண்டு வரவுள்ளோம்.

டிஜிட்டல் மயப்படுத்தலுக்கு பிரவேசிக்க தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற தொகுதியையும் டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம் நீதிமன்றத்திற்குத் தேவையான தரவுகளை பெற்றுக் கொள்ளும் சட்டங்களை தயாரிக்கவுள்ளோம்.மக்களின் சேவையை டிஜிட்டல் மயப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 30 மாதங்களுக்குள் இந்த செயலை முடிவுக்கு கொண்டு வர முடியும் என நாம் நம்புகிறோம்.

கேள்வி: அரசாங்கத்திலிருந்து இரண்டு அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தார். தற்போது அரசியல் ரீதியாக நாட்டில் பல கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறான நிலைமையில் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை உள்ளதா?

பதில்: அரசாங்கத்தைப் பொறுத்தவரை அந்த அமைச்சர்கள் இருவரையும் நீக்காமல் இருந்திருந்தால் நல்லது. ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் சுவரில் வைத்து அழுத்திய போது, முடிவுகளை எடுக்க வேண்டி நேரிட்டது. அரசாங்கத்தை சீராக நடத்தும் போது சில கஷ்டமான முடிவுகளையும் எடுக்க வேண்டியுள்ளது. 2005 இல் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு மக்கள் விடுதலை முன்னணி பெரும் அர்ப்பணிப்பை செய்தது. ஆனால் மக்கள் விடுதலை முன்னணியுடன் கருத்து மோதலான கொள்கை மாற்றத்துக்கு வந்த பின்னர் அன்று மக்கள் விடுதலை முன்னணியை அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற முடிவு எடுக்க வேண்டி நேரிட்டது. அதேபோன்று அனுர பண்டாரநாயக்க ,மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியாரச்சி ஆகியோரும் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்கள். ஆனால் கொள்கை ரீதியாக கருத்து மோதல் ஏற்பட்டால் அரசாங்கத்தின் இருப்புக்காக நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும்.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில சம்பவத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் மற்றும் அரசாங்க கட்சிக்கும் அந்த முடிவை எடுக்க நேரிட்டது. அரசியல் என்பது முடிவுகள் எடுப்பதாகும். முடிவுகள்எடுக்காமல் இருப்பது அல்ல. ஆனால் சிலவேளைகளில் அவ்வாறான முடிவுகளை எடுக்காத நிலைமைக்கு எமது அனைவருக்கும் கடமையுண்டு. நாம் அதனை செய்யாமல் இறுதியில் முடிவை எடுத்த பின் அதில் சரி தவறு பற்றி ஆராய்வதால் பலனில்லை.

கேள்வி: அரசங்கத்தின் எதிர்கால அரசியல் பயணம் எவ்வாறு அமைய வேண்டும்?

பதில்: அரசாங்கமாக நாம் அனைத்து தரப்பாரையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

**மஹிந்த அலுத்கெதர...**
தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் மெய்நிகர் அரங்கு

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கமானது அண்மையில் கொண்டாடப்பட்ட சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு மெய்நிகர் அரங்கு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. அனைத்துலக பெண்கள் தினம் தொடர்பான மேற்படி மெய்நிகர் அரங்கு அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளையதினம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன்படி அனைத்துலக பெண்கள் தின கருத்தரங்கு நாளை மெய்நிகரில் நடைபெறும். தமிழ்நாட்டிலிருந்து பிரபல கவிஞர் மாலதி மைத்ரியும், இலங்கையிலிருந்து ஓவியர் கமலா வாசுகியும் மெய்நிகர் கருத்தரங்கில் உரையாற்றுவர்.

இலங்கை, இந்திய நேரப்படி நாளை பிற்பகல் 130 மணிக்கு அரங்கு ஆரம்பமாகும். அவுஸ்திரேலிய நேரத்தின்படி இரவு 700 மணி, இங்கிலாந்து நேரப்படி நாளை காலை 800 மணி, ஜெர்மனி, பிரான்ஸ் நேரத்தின்படி காலை 900 மணி, நியூசிலாந்து இரவு 900 மணி, கனடா அதிகாலை 400 மணி.

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், கவிஞருமான கவிஞர் ஆழியாள் மதுபாஷினி இந் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துள்ளார்.

மெய்நிகர் இணைப்பு:
Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/87698141170?pwd=TnFleEhtMkl5alQwLo4vOGd6Mkh1dz09
Meeting ID: 876 9814 1170
Passcode: 444485.



**லெ.முருகபூபதி**

# யூனியன் அஷ்யூரன்ஸ் ஒப்பற்ற வளர்ச்சி பதிவு

**யூனியன் அஷ்யூரன்ஸ் 2021 ஆம் ஆண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்ததன் மூலம், இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநர் எனும் தனது நிலையை மேலும் உறுதி செய்துள்ளது. சில முக்கியமான பிரிவுகளில் ஒப்பற்ற வளர்ச்சியை இந்நிறுவனம் பதிவு செய்திருந்தது. சிறந்த 5 துறைசார் செயற்பாட்டாளர்கள் மத்தியில் அதியுயர் வழமையான புதிய வியாபார வளர்ச்சியை இந்நிறுவனம் பதிவு செய்திருந்ததுடன், துறையின் சராசரியான 29% உடன் ஒப்பிடுகையில் 42% வளர்ச்சியை எய்தியிருந்தது.**

2021 ஆம் ஆண்டில், நிறுவனம் Million Dollar Round Table (MDRT) இல் 300 தகைமையாளர்களை உருவாக்கியிருந்தது. இலங்கையின் ஆயுள் காப்புறுதித்துறை வரலாற்றில் இதுவரை பதிவாகியிருந்த அதியுயர் எண்ணிக்கையாக இது அமைந்துள்ளது. கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களுக்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டு மிகவும் சவால்கள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்த நிலையில், இந்த சிறந்த பெறுமதிகளை யூனியன் அஷ்யூரன்ஸ் எய்தியிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், நிறுவனத்தின் வினைத்திறன் தொடர்பில் அதிகளவு பெருமை வெளியிட்டிருந்தார். இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையை மாற்றியமைக்கும் தூரநோக்குடைய தந்திரோபாயத் திட்டத்தினூடாக இந்த வெற்றிகரமான பெறுபேறுகளை எய்த முடிந்திருந்ததாக குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கியிருந்த ஊழியர்கள், முகவர்கள், ஆலோசகர்கள் மற்றும் இதர பிரதான பங்காளர்களுக்கும் கோம்ஸ் தமது நன்றிகளை தெரிவித்தார்.



2021 ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் சில முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளை பதிவு செய்திருந்தது. நிகர செலுத்தப்பட்ட கட்டுப்பணம் (GWP) ரூ. 15 பில்லியனை கடந்திருந்தது. இது முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 13 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பாகும். வழமையான புதிய வியாபார கட்டுப்பணம் ரூ. 3.1 பில்லியன் முதல் ரூ. 4.4 பில்லியனாக அதிகரித்தது. ஆண்டில் முதலீட்டு வருமானம் ரூ. 5 பில்லியனைக் கடந்திருந்தது. மொத்த தேறிய வருமானம் ரூ. 17.4 பில்லியனிலிருந்து ரூ. 20.6 பில்லியனாக அதிகரித்திருந்ததுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக தேறிய பணப்பாய்ச்சல் ரூ. 8.3 பில்லியனிலிருந்து ரூ. 9.3 பில்லியனாக அதிகரித்திருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிதி அதிகாரி ஆஷா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "இலாபகரத்தன்மையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை நாம் பதிவு செய்திருந்தோம். வரிக்கு முந்திய இலாபம் 46% இனால் அதிகரித்து ரூ. 2.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2020 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 1.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 921 மில்லியனிலிருந்து ரூ. 2.1 பில்லியனாக அதிகரித்திருந்தது. GWP, தேறிய முதலீட்டு வருமானம், செலவுகளை முறையாக கட்டுப்படுத்தியிருந்தமை மற்றும் செயன்முறை முன்னேற்றங்கள் போன்றவற்றினூடாக இந்த அபார 123% வளர்ச்சியை எய்த முடிந்தது" என்றார்.

ரூ. 1 பில்லியன் ANBP பெறுமதியைக் கடந்து நாட்டின் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநராக யூனியன் அஷ்யூரன்ஸ் தெரிவாகியிருந்தது. அதிகளவான பாங்கசூரன்ஸ் பங்காண்மைகளை எய்தியிருந்ததுடன், நிலைபேறான வியாபார வளர்ச்சிக்கு வழிகோலியிருந்தது.

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் இலங்கையின் காப்புறுதித் துறையின் வரம்புகளை தொடர்ந்தும் நகர்த்தும் வகையில் இயங்குகின்றது. நிறுவனத்தினால் தொடர்ந்தும் தனது விநியோக நாளிகைகளை பன்முகப்படுத்துவது, பாங்கசூரன்ஸ் பங்காண்மைகளை மேம்படுத்துவது, புத்தாக்கமான காப்புறுதித் தீர்வுகளை கட்டியெழுப்புவது மற்றும் புரட்சிகரமான டி ஜிட்டல் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது போன்றவற்றில் நிறுவனம் தொடர்ந்தும் கவனம் செலுத்தும்.



கொழும்பு 13, புதுச்செட்டித் தெரு சீரடி சாயி மந்திர் இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பக்தர்களையும் காணலாம். (படப்பிடிப்பு : வத்தளை விசேட நிருபர் )

# பூஸ்டர் தடுப்பூசியை விரைவாக பெற்றுக்கொள்ளுங்கள்

## நாட்டு மக்களுக்கு சுகாதார அமைச்சு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பூஸ்டர் தடுப்பூசிகளை விரைவாக பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள பூஸ்டர் தடுப்பூசி எதிர்வரும் ஜூலை மாதம் காலாவதியாவதால் விரைவாக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்காக வருகை தருவோரின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும் எவ்வாறெனினும் தடுப்பூசிக்கான காலவதியாகும் தினத்தை மாற்றுவதற்கு முடியாது என்றும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் இதுவரை அதன் பாதிப்பு தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் முன்வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான தேவை மக்களுக்கு குறைந்து காணப்படுவதால் நான்காவது தடுப்பூசியை தேவையானவர்களுக்கு பெற்றுக்கொடுப்பது எவ்வாறு என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் நாட்டில் 6, 406பேர் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசியைப்பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## உயரிய விருது பெற்ற உக்ரைனின் நடிகை ரஷ்ய தாக்குதலில் பலி



உக்ரைனின் தலைநகர் கீவில் உள்ள குடியிருப்பு கட்டிடம் ஒன்றின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் உக்ரைன் நாட்டு நடிகை ஒக்சானா ஸ்வெட்ஸ் (வயது 67) உயிரிழந்துள்ளார்.

இதனை தி ஹாலிவுட் ரிப்போர்ட்டர் என்ற பத்திரிகையும் உறுதி செய்துள்ளது.

உக்ரைன் நாட்டில் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் உயரிய விருது நடிகை ஒக்சானாவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அன்ஹுய், மான்ஷானிலுள்ள உருக்கு நிறுவனமான Baowu Steel conglomerate offices அலுவலகத்துக்கு விஜயம் செய்த தூதுவர் கலாநிதி பாலித கொஹொன, அந் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளைச் சந்தித்து, இலங்கையில் அவர்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கலந்துரையாடினார். இலங்கையின் ஹம்பாந்தோட்டையில் சுமார் பில்லியன் டொலர் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலான ஆய்வறிக்கையை Baowu நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

# இந்தியாவின் நிதி உதவிக்கு அமைச்சர் டக்ளஸ் நன்றி தெரிவிப்பு

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

இந்தியாவின் நிதி உதவிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நன்றி தெரிவித்தார் . நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்கான தனது 02 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து நேற்று (18) பிற்பகல் நாடு திரும்பினார். அமைச்சரின் இந்த விஜயத்தின் போது இந்தியாவுடனான 01 பில்லியன் டொலர் கடன் வசதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிதி உதவிக்கு கடற்தொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நன்றி தெரிவித்துள்ளார். முல்லைத்தீவில் நடைபெற்ற கடற்தொழிலாளர்களுக்கான இந்திய அரசாங்கத்தின் மனிதாபிமான உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் 200 கடற்தொழில் குடும்பங்களுக்கு நேற்று (18) இந்திய அரசின் மனிதாபிமான உதவிப்பொருட்கள் மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன. இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான இந்திய தூதரகம் மேலும் பல உதவிகளை தருவதற்கு தயாராகிக்கொண்டிருக்கின்றார்கள்.

விலைவாசி பொருள் தட்டுப்பாடு இலங்கையில் மாத்திரம் அல்ல எல்லா நாடுகளிலும் இருக்கின்றது.இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர்களை இந்தியா வழங்கியுள்ளது எங்களுக்கு கஷ்டமான நேரத்தில் இந்திய அரசின் இந்த உதவிக்காக இந்திய மக்களுக்கும் இந்திய அரசுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வீட்டின் மேல் மாடியில் கஞ்சா வளர்த்தவர் கைது

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் உள்ள மலையடிக் கிராமத்தில் வீடு ஒன்றின் மூன்றாவது மாடியின் மேல் கஞ்சா செடிகளை வளர்த்து வந்த நபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரை நேற்றுமுன்தினம் (17) ஆம் திகதி கைதுசெய்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிசார் வீட்டின் மூன்றாவது மாடியின் மேல் பூச்சாடிகளுடன் இணைத்து இரு கஞ்சா செடிகளை மீட்டதுடன் 33 வயதுடைய வீட்டின் உரிமையாளரையும் கைது செய்தனர். இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 40,000 மெற்றிக் தொன்... *(03ஆம் பக்கத் தொடர்)*

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் வாகனங்களும் மக்களும் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்ததைக் காண முடிந்தது.(ஸ)

## பொலன்னறுவை மஜீதிய்யா... *(03ஆம் பக்கத் தொடர்)*

அப்துல் மஜீத் கௌரவ அதிதியாகவும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா நிறைவேற்று உறுப்பினர் கலாநிதி அஷ் ஷெய்க்ஹ் அஸ்வர் (அஸ்ஹரி) விசேட பேச்சாளராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 'இலங்கை மக்களின்... *(03ஆம் பக்கத் தொடர்)*

அயலகத்திற்கு முன்னுரிமை என்ற கொள்கைக்கமைய இந்தியா இலங்கையுடன் ஒருங்கிணைந்ததாக செயற்படும் அத்துடன் இந்தியா எப்போதும் இலங்கைக்கு நட்பு நாடாக இருக்கும் என இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## IMF இன் உதவியை ...

ஏனைய நாடுகளின் உதவியைப் பெறுவதற்கான அடித்தளத்தை சர்வதேச நாணய நிதியம் வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உலகப் போருக்குப் பின்னர் , உள்நாட்டுப் பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளிக்க பல நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை நாடியன. பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் கூட கடந்த காலங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு கையிருப்பு மற்றும் வருவாய் குறைந்து வருவதால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அவசியமானது, ஆனால் நீண்ட கால சீர்திருத்த நிகழ்ச்சி நிரல்களை செயல்படுத்துவதன் மூலம் அதை ஆதரிக்க வேண்டும் என்றும் இதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான பல வாய்ப்புகளை அரசாங்கம் நழுவவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி, நிதிக் கொள்கை மாற்றங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிற பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களுக்கு நிதியளிப்பதால், தற்போதைய நிர்வாகம் குறைந்தது 10 வருடங்களுக்கு பின்பற்றக்கூடிய சுருக்க கட்டமைப்பை உருவாக்குவது முக்கியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையுடன் ஆரம்பகட்ட...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோருடன் கலந்துரையாடிய போதிலும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் நிவாரணத்துக்காக இலங்கை இன்னும் விண்ணப்பிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கோரிக்கை விடுக்கப்பட்டால், அதை பரிசீலிக்கலாம் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

## கொள்ளைச் சம்பவங்கள்...

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

பல்பொருள் அங்காடிகள் மற்றும் வீடுகளை உடைத்து பொருட்களை கொள்ளையிடும் சம்பவங்கள் சில பிரதேசங்களில் பதிவாகியுள்ளன. இவ்வாறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பிரதமர் மஹிந்த இன்று...

மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு மத்திய நிலையத்தையும், வர்த்தக தொகுதிகளையும் திறந்து வைக்கவுள்ளார்.

மாவட்ட விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக 30ற்கும் மேற்பட்ட வர்த்தக நிலைய தொகுதிகள் மத்திய நிலையத்துடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலும் இவ்வாறான அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜனாதிபதியுடனான பேச்சுக்கு ...

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வு வழங்க இந்த அரசாங்கம் தயாராக இல்லை.

தமிழ் மக்களை இந்த அரசாங்கத் தரப்பினர் மிகவும் மோசமாகத் தான் நடத்துகின்றனர். ஒரு பேச்சுவார்த்தைக்கான சரியான ஒரு சூழலைக்கூட இந்த அரசாங்கத்தால் உருவாக்க முடியவில்லை.

ஒரு பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொண்டு மறுபக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் மரணச் சான்றிதழும், ஒரு இலட்சம் ரூபா பணமும் வழங்க இந்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட மக்களை மேலும் மேலும் துன்பத்திற்கு உள்ளாக்கக் கூடிய விடயம்.

எனவே, காணி கபளீகரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், பொருளாதார நெருக்கடி குறித்தும் ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்லவுள்ள தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

என்னென்ன அமைச்சு சார்ந்த விடயங்களில் பிரச்சினைகள் உள்ளன என்பதை தீர்மானித்து முன்னரே ஜனாதிபதியிடம் அறிக்கையாக கொடுக்கும்போது அது சார்ந்த அமைச்சர்களும் பேச்சுவார்த்தையில் பங்கேற்று ஒரு தீர்க்கமான முடிவொன்றை பேச்சுவார்த்தையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## நீண்டகியூ வரிசைகளுக்கு...

பெற்றோல் மற்றும் டீசல் ஒரு பௌசர் வீதம் விநியோகிக்குமாறு அமைச்சர் காமினி லொக்குகே உத்தரவிட்டுள்ளார். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் நீண்ட வரிசையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். உலக சந்தையில் எரிபொருள் விலைக்கு அமைய இலங்கையிலும் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுமா? என்று வினவியபோது அது தொடர்பாக பேச்சுவார்த்தை இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேநேரம் நாட்டில் எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியிருப்பதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார்.

## 4,000 கொள்கலன் வாகனங்கள்...

வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளதாகவும் தமது சங்கத்தினால் சுமார் இரண்டாயிரம் கனரக வாகனங்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து பஸ் சேவைகள் பாதிக்கப் பட்டுள்ள இவ்வேளையில் அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்லும் கனரக வாகன சங்கங்களும் சேவையிலிருந்து விலகியுள்ளன.

நாட்டுக்கு தேவையான எரிபொருள் உள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதிலும் நாளாந்தம் எரிபொருள் நிலையங்கள் முன்பாக நீண்ட வாகன வரிசையே காணப்படுகிறது. நேற்று முன்தினம் இரவும் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் நீண்ட வாகன வரிசைகளை அவதானிக்க முடிந்தது. டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய்யை பெற்றுக் கொள்ள மக்கள் நீண்ட நேரமாக காத்திருந்தும் தமக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாததன் காரணத்தினால் ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொது மக்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் கைகலப்பு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

நெருக்கடியை சமாளிக்க முடியாது மக்கள் பொறுமையிழக்கும் நிலைமையை இது வெளிப்படுத்துவதாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர். எனினும் இது குறித்து கருத்து தெரிவித்த வலுசக்தி அமைச்சர் காமினி லொகுகே, இம்மாதம் 20 ஆம் திகதியின் பின்னர் நாட்டுக்கு தேவையான எரிபொருளுடன் 10 கப்பல்கள் இலங்கையை வந்தடையும். எனவே நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்க மாட்டோம். புதுவருட காலத்தில் ஒருபோதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றார்.

## அமைச்சர் பசில் ...

பெறுவதற்கான இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ச கடந்த 15 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டதுடன் இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார்.

## ரஷ்யாவின் தீவிர தாக்குதலில் ...

அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் பாடசாலை, சமுதாயக் கூடம் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டின் கார்கிவ் நகருக்கு அருகே உள்ள மெரேஃபாவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர்கள் கூறினர்.

இது குறித்து அந்தப் பகுதி நீதித்துறை அலுவலகம் வெளியிட்டுள்ள முகநூல் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மெரேஃபாவில் பொதுமக்கள் தங்கியிருந்த பாடசாலை, சமுதாயக் கூடம் ஆகியவற்றின் மீது ரஷ்யப் படையினர் நேற்றுமுன்தினம் அதிகாலை ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர் மேலும் 25 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த முகநூல் பதிவுடன் இணைக்கப்பட்டிருந்த படத்தில், பல அடுக்கு கட்டடமொன்றின் நடுப்பகுதி குண்டுவீச்சில் சேதமடைந்துள்ளதும், அங்கு பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள காட்சியும் இடம் பெற்றுள்ளது.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரான கார்கிவுக்கு 30 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஊரான மெரேஃபாவில் கடந்த சில வாரங்களாக ரஷ்யப் படையினர் தாக்குதலைத் தீவிரப்படுத்திவருகின்றனர்.

உக்ரைனின் துறைமுக நகரான மரியுபோலில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த 3 அடுக்கு திரையரங்கில் ரஷ்யா வான்வழித் தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனினும், இந்தத் தாக்குதலில் அந்த திரையரங்கம் தரைமட்டமானாலும், நூற்றுக்கணக்கானவர்கள் பதுங்கியிருந்த சுரங்க அறையில் பலர் உயிர்பிழைத்திருப்பதற்கான வாய்ப்புள்ளதாக அதிகரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## மாணவர்களுக்கு வழங்கப்படும்...

கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து கல்வி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலை பஸ் விபத்து...

இந்தச் சம்பவம் வலஸ்முல்ல ஹிங்குவரத்தை, ஹந்துகலவில் நேற்று இடம்பெற்றுள்ளது. விபத்துக்குள்ளான பஸ்ஸில் 30 மாணவர்கள், 2 ஆசிரியர்கள், 6 பயணிகளும் சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் சிறு காயங்களுக்குள்ளான 15 மாணவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

## பொதுமக்களின் எதிர்ப்பினால்...

விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – புத்தளம் வீதியில் (17) மோட்டார் சைக்கிள் – வாகன பேரணி மக்கள் மத்தியில் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பிலுள்ள தனியார் மோட்டார் சைக்கிள் நிறுவனம் ஒன்று இதனை ஏற்பாடு செய்திருந்தது.

குளியாப்பிட்டிவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி (17) கற்பிட்டி வரை பயணித்து, நேற்று (18) கற்பிட்டியிலிருந்து குருநாகல் வரை புறப்பட்டது. பொலிஸாரின் பாதுகாப்புடன் முன்னெடுக்கப் பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன பேரணியில் 500 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும், 70 இற்கும் மேற்பட்ட சொகுசு வாகனங்களும் பேரணியில் கலந்து கொண்டன. தற்பொழுது நாட்டில் எரிபொருள் கொள்வனவு செய்ய மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்று பெரும் சிரமங்களுக்கு மத்தியில் எரிபொருளை கொள்வனவு செய்து வருகின்றனர்.

நாட்டின் நிலைமைய கருத்தில் கொள்ளாமல், வீதியில் போக்குவரத்துக்கு தடைகளை ஏற்படுத்தி, அபாயகரமான வாகனங்களை ஓட்டியதாகவும், எரிபொருளை வீணடிப்பதாகவும் இந்த பேரணிக்கு எதிராக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கொழும்பு புத்தளம் பிரதான வீதியில் இந்த வாகன பேரணி வலம் வந்த போது மக்கள் வீதியில் தடைகளை ஏற்படுத்தி தமது எதிர்ப்புக்களையும் ஏற்படுத்தினர்.

இதேவேளை, வாகன பேரணியை விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டதாகவும் மற்றுமொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. எனினும் இந்த பேரணிக்கும் , தமது அமைச்சுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என விளையாட்டுத்துறை நாமல் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இவ்வாகன பேரணியின் பின்னணியில் தாம் இருந்ததாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த மோட்டார் சைக்கிள் – வாகன பேரணிக்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் எந்த உதவியும் செய்யப்படவில்லை. விளையாட்டு அமைச்சுடன் தொடர்பில்லாத தனியார் நிறுவனத்தினால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என விளையாட்டுத்துறை அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வாகன பேரணி ஒரு தொண்டு நிறுவனத்தின் நன்கொடையின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்ததாகவும், இது ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுவதாகவும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## உயிருடன் இருக்கும்...

48 வயதான டபிள்யூ.இ. சரத் என்ற நபருக்கு மரண சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கார் விபத்தில் மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டு மரணம் ஏற்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

## சாவகச்சேரி 'சதொச'வுக்கு...

மேற்கொண்டுள்ள அமைச்சர், குடாநாட்டின் வர்த்தக நிலவரங்களை ஆராயும் சந்திப்புகள் மற்றும் விஜயங்களில் நேற்று (18) ஈடுபட்டார்.

இவ்விஜயத்தின்போது, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வர்த்தக அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பிரியங்களின் பிரிவு



மௌனத்தை மொழிபெயர்த்த
இறுக்கமான சூழ்நிலை
விழவென்று காத்திருக்கும்
விழியோர கண்ணீர் துளி

திரைமறைவில் முகம் மறைத்து
கரைகடக்கும் கண்ணீரை
சிறைப்படுத்தும் சாமர்த்தியம்
சிலபொழுது சிதறிவிடும்

புரிந்து கொண்டவர்களும்
பரிவு காட்டியவர்களும்
பிரிந்து போவதென்பது
வரிந்து அரவணைக்கும் வேதனையல்லவா

அடிவயிற்றின் விம்மல்கள்
அகத்தின் ஒப்பாரிகள்
மடிதேடும் மழலையாய்
முடிவில்லாத பெருமூச்சுக்கள்

கத்தி அழச்சொல்லி
குரல்வளை கெஞ்சுது
புத்தி நிதானித்து
புன்னகையை சிந்துது

தீ மூட்டும் ஞாபகங்கள்
திரை விலகும் நினைவலைகள்
கோள்மூட்டும் எண்ணங்கள்
கோதை இவள் என் செய்வாள்

அணிசேர்ந்து அழவைக்கும்
அழகான நினைவுகள்
பிணிமூட காத்திருக்கும்
பசியறியா பொழுதுகள்

உதட்டு நடுக்கங்கள் காட்டும்
உள்ளத்து விசும்பல்கள்
வறட்டு கௌரவம் வழிமறிக்கும்
வாய்விட்டு அழும் அழுகைகள்

தூங்காத இரவுகளால்
தலையணைகள் ஈரமாகும்
தாங்க வொன்னா தவிப்புக்களால்
நினைவுகளும் பாரமாகும்.

**கம்மல்துறை இக்பால்**

# அணைந்தது அசகாய ஆதவன்



ஆதவன் அடங்கியது !
அகத்துள் ஏற்றிய
அதன் தீபம் இன்று
ஆடியும் அடங்க மறுக்கிறது !
சிந்தைக்குள் இட்ட 'எண்ணெய்',
சுடரின் அணைவைத் தடுக்கிறது !

"பகலவனின் பட்டறையில்
பட்டை தீட்டிய வைரங்காள். . . .!
பொலிவை இழப்பதா . . . . ?"
சிந்தைக்குள் செதுக்கிய
அதன் சிற்பங்கள் இன்றும்
சீறிச் சினக்கிறது !

சமூக விடியலுக்கான . . . .
சத்தியக் கதிரோனின்
சாத்வீகப் போராட்டம் இன்று
ஆடுகிறது பேயாட்டம் !

வெகுளி துறந்து . . . .
வீரம் செறிந்து . . . .
பட்டி தொட்டி எல்லாம்
பட்டுத் தெறித்த
வையோனின் வீரக் கதிர்கள்
கழுத்தைக் கொடுத்து
எழுத்தைக் காத்தது !
கருத்தை வென்றது கருத்து !
கலைத்துவத்தால் வென்றது !

அணைந்தது !
அசகாய ஆதவன் !
அதன்
அறிவொளி இழந்து. . .
ஏங்குகின்ற இதயங்கள்,
இன்றும் கூட. . . . .
இருகரம் ஏந்துகின்றன !
அதற்காக. . . . .
இறை சாந்திக்காக !

**முஹம்மத் மிஃப்ராஹ்**
( பிரபல எழுத்தாளர் கவிஞர்
எம்.எச்.எம். ஷம்ஸின் 82 ஆவது ஞாபகார்த்த
தினத்தையொட்டி பிரசுரிக்கப்படுகிறது )

# ஒரு தாயின் குமுறல்



கருவை சுமந்த படி..
தாழம்பூ துடிக்கிறது!
புகை மண்டலத்தில்..
சூரிய காந்தி பூக்குது!

உக்ரைனின் மனதை..
உணர முடியள..!
ரஷ்யாவின் ரகசியத்தை..
தெரிய முடியள..!

விசத்தை கக்குகிறது..
பீராங்கி பாம்புகள்..!
கை கால் இழந்து..
தவிக்கிது மழலை பிஞ்சுகள்!

துப்பாக்கி முனையில்..
பேச்சு வார்த்தை...!
மத்தாப்பு வரிசையில்..
குண்டு மழை சத்தம்..

நித்தமும் நடுங்கி..
பித்தமும் பிடிக்கிறது..!
முத்தமும் கொடுக்க..
என் மகன் எங்கே..?
தவளையும் யானையும்..
தகறாரு செய்து கொண்டால்..
நடுவில்... தாவர செடிகள்..
மிதிபடுவது போல் நாங்கள்..!

இருப்பிடத்தை தொலைத்து
விடியலை தேடுகிறோம்..
ஒரே நாடு..!
ஒரே இருட்டு..!

**டி. எல். நஸீம்**
கிண்ணியா 01

# விலையேற்றமும் நிலை மாற்றமும்



இந்து சமுத்திரத்தின் முத்திலே
இளைப்பாற நினைத்தேன்.
இடம் தந்து உறங்க வைத்தது
இரக்கம் கொண்டது
இப்படித்தான் இருக்கும்.

ஆசியாவின் அதிசயமாக
காண்போரைக் கவர்ந்திழுத்தது.
உல்லாசம் வருவோரை
வரவேற்று வாழ்த்தியது அன்று.
கொரோனாவின் கோரப்பிடியில்
தன்னை வீழ்த்தியது இன்று.
தொலைபேசியில் தொலை தூரம்
செல்லும் நாடுகளுக்கு மத்தியில்
விலை வாசி ஏற்றத்தால்
அரைவாசியும் அழிகிறது
நாளுக்கு நாள்.

டீசலும் விலையேற்றம்
பெற்றோலும் விலையேற்றம்
மக்களது வாழ்வில் நிலைமாற்றம்
ஈன்று எடுத்த பெற்றோரும் ஏமாற்றம்
தம் பிள்ளைகள் குறித்து!

கைகோர்த்த நாடுகளும்
கைகாட்டி கண்காட்சி பார்க்கின்றன.
இலங்கை என்ன, வேடிக்கைப் பொருளா?
உதவுங்கள்! உயர்த்துங்கள்
அன்புடன் வாழ்வோம்
மாண்புடன் இணைவோம்

புறப்படுவோம்
புத்துயிரளிப்போம்
எமது தாய்த்திரு நாட்டைக்
காத்திடுவோம்.
வாழ்க தாய்த்திரு நாடே.

**அ.ல.மு. றினாஸ்**
கிண்ணியா

# பெண்பிள்ளை வாழ்க்கை



திரண்டுவரும் ஆசைகளின் தெருவுக்குள் நுழைந்து
==திருவிழாவாம் வாழ்வென்னும் தேரதனை இழுக்க
வரங்கேட்டுத் தவமிருக்கும் வனிதையர்கள் தொழுது
==வாசல்படித் தாண்டாத விரதங்கள் பூண்டு
சிரத்தையுடன் செய்கின்ற சிவபூஜைக் காண
==சிறப்பாக வருகின்ற சிருங்காரக் கரடி
மிரண்டுவிடும் வகையினிலே மெல்லிதழைத் திறத்து
==மெதுவாகக் கேட்பானே சீர்வரிசை விருந்து.

விருந்தாகக் கேட்டவனின் விருப்பங்கள் கண்டு
==வெயிலோடும் மழையோடும் போராடி உழைத்து
அரும்பாடு பட்டப்பன் சேமித்த தெல்லாம்
==அவனுக்கு வழங்கிட முன்வந்து பெண்ணைத்
திருமண கோலத்தில் கண்டுவிடத் துடித்து
==தேய்வானே செருப்பாக தெருவோடு நாளும்.
கரும்புண்ணத் தேனள்ளிப் போகின்றக் குரங்குக்
==கைக்குள்ளே பூமாலை யாவாளே கன்னி.

மாமனெனும் மாமரத்தில் மாங்காய்கள் பறித்து
==மணவாழ்க்கை சந்தையிலே மலிவாக விற்றே
சாமத்திலும் ஏமத்திலும் சாத்தானின் உறவாய்
==சாராய போத்தலுடன் சரசங்கள் கொண்டு
காமத்துக்கு வேறொருத்திக் கைபிடிக்கும் பொல்லாக்
==காதகர்கள் கத்தியின்றிக் கழுத்தறுத்துக் கொல்லும்
ஊமைத்தன நாடகத்தை அரங்கேற்றிப் பிழைக்கும்
உயிரிருந்தும் ஜடமாகித் திரிகின்றார் மண்ணில்

செய்வதற்குத் தொழிலென்று எதுவுமற்றப் போதும்
==செயலாளர் பதவியிலே இருப்பதுபோல் தங்கள்
மெய்யுருக மேலோர்போல் பாவனைகள் காட்டி
==மினுக்குகின்ற மின்மினியை நிலவென்று நம்பி
தெய்வமது பிள்ளைக்கு தேர்ந்தெடுத்துத் தந்த
==தேவனெனக் கொள்கின்ற தீர்மானம் தவிர்த்து
பொய்யர்களை இனங்கண்டு பெண்பிள்ளை வாழ்க்கை
==பூஞ்சோலை காவலனை புடமிடுவீர் நன்றே!

**மெய்யன் நடராஜ்**

# நிலா வீடு



தற்காலிகம்
எங்களிடம் இருப்பது கொஞ்ச
அரிசிதான் அது
வீட்டில் உள்ளவர்களுக்கே
போதாது இப்படியிருக்க
நீ ஏன் இப்படி காய்கின்றாய்
இன்று போய் நாளை வா
என்று சொல்லவில்லை
இன்று போய் என்றும்
வராதே நிலாவே!
எங்களிடம் தர இனி ஒன்றும் இல்லை

**கவிக்கிறுக்கன்,**
இணுவில்

# புதுமையானவளின் கடிதம்



வலிகளை விழிகளால்
மறைத்து வழிகள்
எதுவும் இல்லாது
கதறியழும் தாய்மையின்
கடிதம் இது.

ருசித்த சாப்பாடும்
இரசித்த இயற்கையினையும்
இழந்து போனவள்
நான்.

ஆசைகளை மறைத்து
வேசை எனும்
பெயரெடுத்தும் உயிர்
கொடுத்துப் போனவளும்
நான்.

முகமகிழ்ந்து போன
நாட்களை விட
இவ் யுகத்தினை
எவ்வாறு கடந்து
போவேன் என
எண்ணிப் போன
நாட்களே அதிகம்.

உறக்கம் இல்லாத
நாட்களும் இரக்கம்
காட்டாத மக்களும்
இவ்வுலகில் நிறைந்து
போனதால் கண்ணீரில்
உரைந்து போய்
உள்ளேன் இன்று
வரை.

தகர்ந்து போன
வாழ்க்கையினைக் கண்டு
யுகம் மறந்து
புலம்புகிறேன்
புதுமையானவள்
என கூறிக் கொண்டு.

**பொத்துவில் அஜ்மல்கான்**

திகதி 17.03.2022
வியாழககிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4709
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,651,900.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 4 7 6 0 3 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,752,030.00

Mega POWER மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1057
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,980,060.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 242,333,342.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 19 22 37 70

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 739
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,750,880.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 32 54 71 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 102,938,670.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

# வடக்கில் இருந்து பனங்கள்ளு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 20 புதிய சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்கவுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தகத்துறை அமைச்சர் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகதுறை சம்பந்தமான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வடபகுதியில் உணவு பற்றாக்குறை மற்றும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக 20 சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்க உள்ளோம். அவ்வாறு திறப்பதன் மூலம் பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை தங்குதடையின்றி பெற்றுக்கொள்ளமுடியும். அத்தோடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள உணவு களஞ்சிய சாலைகளில் அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைத்து சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் பொதுமக்கள் இலகுவாக தமது அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அபாயகரமான ஒரு பொருளாதார நிலையே தற்போது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. கொரோனா நோய் காரணமாக பல வல்லரசு நாடுகளிலும் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது அதேபோல் எமது நாட்டிலும் இந்த கொரோனா சூழ்நிலையின் காரணமாகவே பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரேன் யுத்தத்தின் காரணமாக எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களின் விலையும் அதிகரித்து காணப்படுகின்றது. பனங்கள்ளு வடக்கில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் வர்த்தக துறை அமைச்சானது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்து ஏற்றுமதியினை மேற்கொள்வதற்கானநடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. ஒரு ஏற்றுமதியினை செயற்படுத்துவதற்கான கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டு அதனை செயல்படுத்த தயாராக உள்ளோம்.

அதன் ஒரு அங்கமாக பனங்கள்ளு உற்பத்தி கிராமம், பனங்கட்டி உற்பத்தி கிராமம், கடலட்டை உற்பத்தி கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் ஏதாவது எமது அமைச்சுக்கு கிடைக்கப்பட்டால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்கத் தயார். தற்போது நமது நாட்டிற்கு ஏற்றுமதி கட்டாயம் தேவையானது.

குறிப்பாக நுவரெலியாவில் கோப்பி, தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வடக்கில் இருந்து ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது. எனவே வடக்கில் இருந்து பனங்கள்ளை தயார் செய்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.



மன்னார் மாவட்டத்தில் இந்திய அரசின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட மீனவர்கள் இருநூறு பேருக்கு ஆறாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இலங்கைக்கான யாழ் இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன் ஆகியோரும் கலந்து கொண்டு உலர் உணவு பொதிகளை மீனவர்களுக்கு கையளித்தனர்.



நல்லூர் பிரதேச சபையின், சர்வதேச மகளிர் தினமும், சாதனை பெண்கள் கௌரவிப்பும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

## உள்ளூராட்சி மன்றப் பெண்களின் பரிந்துரைகளடங்கிய ஆவணம் கையளிப்பு



யாழ்.விசேட நிருபர்

உள்ளூராட்சி மன்றப் பெண்களின் பங்களிப்பு தொடர்பான பரிந்துரைகளடங்கிய ஆவணம் கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடபிராந்திய இணைப்பாளர் கனகராஜ் ஆகியோரிடம் ஆவணத்தை மகளிர் சமூகப் பிரதிநிதிகள் கையளித்தனர்.

அதனை தொடர்ந்து இந்நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோரிடமும் ஆவணம் கையளிக்கப்பட்டது.

மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முறையும் பெண்களின் பிரதிநிதித்துவமும் உள்ளூராட்சி மன்றங்களின் தரத்தை மேம்படுத்தலும் எனும் தலைப்பில் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் வளப்பங்கீடு தொடர்பில் எதிர்கொள்ளும் சவால்கள், பால்நிலை சார்ந்த விடயங்களில் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் மற்றும் விகிதாசாரமுறை போன்ற பரிந்துரைகள் இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு

# ரூ.01 இலட்சம் இழப்பீட்டு தொகை உடனடி மருந்தாகவே அமையும்

### நிரந்தரமான தீர்வு அவசியம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது

சாவகச்சேரி விசேட நிருபர்



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை, அவர்களுக்கான உடனடி மருந்தாகவே அமையும். இவர்களுக்கு நிச்சயமாக நிரந்தரத் தீர்வு ஒன்று அவசியம். அதில் மாற்றுக் கருத்து எதுவும் கிடையாது. இந்த உடனடி மருந்தைப் பெற்றுக்கொண்டு நிரந்தரத் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டுமென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

காணாமல் போனோர் உறவுகளுக்கு இந்த ஒரு இலட்சம் ரூபாய் தொகை எந்த விதத்திலும் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய பதிலாக இருக்க முடியாது. ஒரு உயிருக்கான பெறுமதி ஒரு இலட்சம் என்பதனை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

காணாமல் ஆக்கப்பட்ட பல குடும்பங்களுடன் இதுவரை பேசியுள்ளேன். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மனைவிமார், பிள்ளைகள், தாய்மார் பலர் அந்த அவல நிலையை கடந்து செல்ல முடியாமல் அங்கேயே நின்று கொண்டிருக்கின்றனர். சிலர் தாலிக் கயிற்றை கழற்ற முடியாத நிலையில் உள்ளனர். சிலர் காப்புறுதியை எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாக இருக்கும் பட்சத்தில் இந்த ஒரு இலட்சம் இழப்பீடு ஓர் உடனடி மருந்தாக அமையும். ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிச்சயமாக நிரந்தரத் தீர்வு ஒன்று அவசியம். அதில் மாற்றுக் கருத்து எதுவும் கிடையாது. எனவே இந்த உடனடி மருந்தைப் பெற்றுக் கொண்டு நிரந்தரத் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



பிரதமர் அலுவலகத்தின் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் பிரதிநிதியும் இணைப்புச் செயலாளருமான கீதநாத் காசிலிங்கம், யாழ்.சுன்னாகம் அருள்மிகு ஐயனார் ஆலயத்தின் மகோற்சவத்தில் கலந்துகொண்டு ஆசி பெற்றுக்கொண்டபோது..

## சிறைச்சாலையிலிருந்து கைதி தப்பியோட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்

சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் நேற்று காலை தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின் பேரில் வவுனியா கூமாங்குளத்தினை சேர்ந்த 20 வயது மதிக்கக்தக்க இளைஞரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்று (18) காலை சிறைச்சாலையிலிருந்து தப்பித்து சென்றுள்ளார். வவுனியா சிறைக்காவலர்கள் வவுனியா பொலிஸாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாவற்குழி உணவுக் களஞ்சியசாலை சதொச களஞ்சியசாலையாக மாற்றம்



கோப்பாய் குறூப் நிருபர்

யாழ்.நாவற்குழி அரச உணவுக் களஞ்சியசாலையை சதொச விற்பனை நிலையங்களின் களஞ்சியசாலையாக செயற்படுத்துமாறு வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று (18) யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன நாவற்குழி உணவு களஞ்சியசாலையை நேரடியாக சென்று பார்வையிட்ட போதே இவ்வுத்தரவை களஞ்கிய ஆணையாளருக்கு வழங்கியுள்ளார்.

மேலும், நெருக்கடி நிலைகளுக்கு பின்னதாக, இக்களஞ்சியத்தை, "ஒரே கூரையின் கீழ் அனைத்து அரச அங்காடிகளும்" என்ற அடிப்படையில் நாடு முழுவதும் அமையவுள்ள "ரஜவாச" பல்பொருள் விற்பனை நிலையமாக மாற்றுமாறு, அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கோரிக்கையை ஏற்று அமைச்சர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார். இவ்விஜயத்தின்போது, கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் பிரதி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வர்த்தக அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தாய்ப்பால் புரைக்கேறி குழந்தை உயிரிழப்பு

யாழ். விசேட நிருபர்


தாய்ப்பால் அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்ற 8 மாதப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது. பால் புரைக்கேறியமையே உயிரிழப்புக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. வட்டுக்கோட்டை, அராலி வடக்கைச் சேர்ந்த யோகசீலன் கிருத்திகா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் (17) அதிகாலை தாய்ப்பால் அருந்திவிட்டு உறங்கிய குழந்தை அதிகாலை 4.30 மணியளவில் அசைவற்று இருந்துள்ளது.

குழந்தை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்தமையை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

# மலைச்சாரல்



## உலக வங்கியின் நிதியுதவியுடன் உடுவரை தோட்ட மக்களுக்கு நீர் விநியோகத்திட்டம்





**பதுளை தினகரன் விசேட நிருபர்**

தேசிய நீர் வடிகாலமைப்பு இராஜாங்க அமைச்சு உலக வங்கியின் நிதியுதவியுடன் 25 மில்லியன் ரூபா செலவில் தெமோதரை ,உடுவரை பெருந்தோட்டத்தில் பாரிய நீர் விநியோகத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

சுமார் 50 வருடகாலமாக உடுவரை பெருந்தோட்ட மக்கள் குடிநீருக்காக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் முயற்சியின் பயனாக இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சுமார் 800 குடும்பங்களைச் சேர்ந்த 3750 பேர் பயனடையவுள்ளனர். அதுமட்டுமின்றி பாடசாலைகள், சன சமூக நிலையங்கள், கோவில்கள், தேவாலயங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் என்ற வகையில், சகல இடங்களும் குடிநீரை பெற்றுக்கொள்ள முடியும்.

குடிநீர் பிரச்சினை காரணமாக தற்சமயம் பவுசர்கள் ஊடாகவே மக்களுக்கு நீர்விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

சில சமயங்களில் அவ்வாறு விநியோகிக்கப்படும் குடிநீரும் மனித பாவனைக்கு உகந்ததாக இருக்கவில்லை.



அக்குறணை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தில் 75 வருட நிறைவையொட்டி அறிமுக நிகழ்வு அதிபர் தலைமையில் அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது பவளவிழா ஞாபகார்த்தமாக சின்னம் பொறிக்கப்பட்ட விசேட தொப்பி, குடை மற்றும் உபகரணங்கள் என்பன வைபவரீதியாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குறணை பிரதேச சபைத் தலைவர் இஸ்திஹா இமாதுதீன் கலந்துகொண்டிருந்தார்.
**படங்கள்: மாத்தளை சுழற்சி நிருபர்**

## மஜீதிய்யா மகளிர் அரபுக்கல்லூரி பட்டமளிப்பு விழா

**மாத்தளை சுழற்சி நிருபர்**

பொலன்னறுவை மஜீதிய்யா மகளிர் அரபுக்கல்லூரியின் 3 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.எஸ்.எம். அன்சார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புரூனை தாருஸ்ஸலாம் (உசுழுத்தீன்) பீடம் சுல்தான் (ஷரீஃப் அலி) முன்னாள் பீடாதிபதி எம்.எம். அபுவர் தீன் பிரதம அதிதியாகவும் சின்பா ஹோல்டிங் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என். காதர் விசேட அதிதியாகவும் பொலன்னறுவை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை தலைவர் அப்துல் மஜீத் கௌரவ அதிதியாகவும், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா நிறைவேற்று உறுப்பினர் கலாநிதி அஷ் ஷெய்க்ஹ் அஸ்வர் (அஸ்ஹரி) விசேட பேச்சாளராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.



குமாரவத்தை தோட்டத்திலுள்ள ஸ்ரீ சண்முகா வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் பார்வையிட்டதுடன், எதிர்கால பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

## லோகி தோட்ட வழிப்பிள்ளையார் ஆலயத்தை பொதுவுடமையாக்குவதற்கு நடவடிக்கை

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் அமைந்துள்ள தலவாக்கலை லோகி தோட்ட வழிப்பிள்ளையார் ஆலயத்தை பொதுவுடமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் பி.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோவிலை பொது மக்களின் வணக்கஸ்தலமாக பெற்றுகொள்ள கோரி பொதுமக்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு இணங்க இந்து கலாச்சார திணைக்களத்தின் விசேட கலந்துரையாடலொன்று தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் அண்மையில் (16) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,





லோகி வழிப்பிள்ளையார் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த ஆலயம். இதனை இப்பகுதிக்கு வரும் அனைவரும் இன, மத,மொழி பேதமின்றி வணங்கிவிட்டே செல்கின்றனர். தற்போது இந்த வழிப்பிள்ளையார் ஆலயத்தின் விதிமுறைகளை மீறி பிழையாக வழிநடத்தப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்து ஆலயங்களுக்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. இந்த ஆலயத்தை தனி நபரோ அல்லது அமைப்புகளோ முன்வந்து புனரமைத்து சிறப்பாக வழிநடத்துவதற்கு முயற்சி செய்தபோதிலும் அந்த சந்தர்ப்பத்தினை வழங்க அதனை நடத்தியவர்கள் அன்று முன்வரவில்லை. அப்படி அதனை வழங்கியிருந்தால் இந்த ஆலயம் தலவாக்கலை பிரதேசத்தில் மிக பிரமாண்டமாக இருந்திருக்கும். இந்த ஆலயம் மத்திய மாகாண இந்து கலாசார திணைக்களத்தினூடாகவோ அல்லது மத்திய அரசினூடாகவோ பதிவு செய்ய முடியும். எனவே இது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை பற்றி முதலில் அறிய வேண்டும். இப்பிரச்சினை தொடர்பாக தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பௌத்த,இந்து கலாச்சார அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். 200 வருடம் பழமை வாய்ந்த ஆலமரம் சட்ட விதிமுறைகளை மீறி வெட்டப்பட்டுள்ளது.

இதனால் ஆசிரியர் ஒருவரின் உயிர் பிரிந்தது. ஆபத்தான மரங்களை வெட்டுவதற்கு சில சட்ட விதிமுறைகள் இருக்கின்றன. சட்ட விதிமுறைகளை மீறி மரத்தை வெட்டுவதற்கு அனுமதி வழங்கிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என்றார்.

## இந்து சமுத்திரத்தின் மீதான அதிகார போட்டியே சர்வதேச தலையீடுகள் அதிகரிக்க காரணம்

**அக்குறணை குறூப் நிருபர்**

**சுனில் அந்துன்னெத்தி**



இந்து சமுத்திரத்தின் மீதான அதிகார போட்டியே சர்வதேச தலையீடுகள் இலங்கையில் அதிகரிக்க காரணமாகும் என ஜே.வி.பியின் அரசியல் உயர்பீட அங்கத்தவர் சுனில் அந்துன்னெத்தி தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1974-94 காலப்பகுதியில் நாட்டில் ஜனநாயக உரிமை இருக்கவில்லை. எனவே ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக்கொள்ள அன்று மக்கள் வாக்களித்தனர். யுத்தத்தை வெல்ல, இனவாதத்தை ஒழிக்க என பலதரப்பட்ட தேவைகளுக்காக காலத்திற்குக் காலம் வாக்களித்தனர். இனிவரும் காலங்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே மக்கள் வாக்களிக்க வேண்டி வரும்.

வரிசைகளில் காத்திருக்கும் நிலையை உருவாக்கி தேர்தல் வரும் போது அதனை தீர்த்து வைப்பர். அதன் பின்னர் ஹீரோவாகி மக்கள் அவர்களுக்கே வாக்களிப்பர். இது தொடர்ந்து நடக்கிறது.

கட்சி மாறும் உறுப்பினர்களை நீக்கும் உரிமை இருக்க வேண்டும். கட்சி மாறுபவர்கள் நல்ல நடிகர்கள். அதனைப்பார்வையிடும் பொதுமக்கள் அப்பாவிகள்.

சக்தி வளம் என்பது நாட்டின் தேசிய பாதுகாப்பு. அவ்வாறு சக்தி வளத்தை முழுமையாக இந்தியாவிற்கு வழங்கி விட்டால் எதிர்காலத்தில் நாட்டின் முழு இயக்கமும் இந்தியாவின் கைக்கு சென்று விடும்.

இந்து மகா சமுத்திரத்தின் அதிகாரம் யார் கையில் உள்ளதோ அவர்களே ஆசியாவில் அதிகாரம் பொருந்தியவராக முடியும். அதனாலேயே இலங்கையின் கட்டுப்பாடு யார் கையில் உள்ளதோ அவர்களே இந்து மகா சமுத்திரத்தின் கட்டுப்பாட்டை வைத்திருக்க முடியும். இதுவே சர்வதேச தலையீடுகள் இலங்கையில் அதிகரிக்க காரணமாகும் என்றார்.

## இராகலை மாக்குடுகலை தோட்ட தொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நுவரெலியா – இராகலை மாக்குடுகலை தோட்ட தொழிலாளர்கள் மற்றும் நாட்கூலி தொழிலாளர்கள் ஆகியோர் இணைந்து நேற்று இராகலை புருக்சைட் சந்தியில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தினர்.

நாட்டில் தற்போது அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதை சுட்டிககைாட்டியும் உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

சுமார் 100ற்கும் மேற்பட்டவர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டதோடு, மாக்குடுகலை நகரத்திலிருந்து புருக்சைட் சந்தி வரை எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்றனர். அதன்பின் அங்கு புருக்சைட் சந்தியில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

விவசாயத்துக்கு உர தட்டுப்பாடு நிலவுகின்றது, அதிக விலை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, தொடர் மின் விநியோக துண்டிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டினர்.

சுமார் ஒரு மணித்தியாலயம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டகாரர்கள் பொலிஸாரின் தலையீட்டால் கலைந்து சென்றனர்.

தினகரன் பத்திரிகையின் 90 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கண்டி விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் சிவக்குமாரின் தலைமையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.
படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்
தினகரன்










தேசிய சேமிப்பு வங்கியின் 50 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தலவாக்கலை கிளை முகாமையாளர் இ.என்.ஜி.ருக்மல் தலைமையில் விசேட நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது சர்வ மத பிராத்தனைகள் இடம்பெற்று கேக்வெட்டி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தலவாக்கலை தேசிய சேமிப்பு வங்கி கிளையின் முகாமையாளர் இ.என்.ஜி.ருக்மல், பிரதி முகாமையாளர் டபிள்யூ. எம்.கவீஷ திலங்க மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துக்கொண்டனர். படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்

## நமுனுகுல – பசறை பிரதான வீதியில் விபத்து

### அறுவர் படுகாயம்



நமுனுகுல பசறை பிரதான வீதி பத்தாம் கட்டைப்பகுதியில் இரு பஸ்வண்டிகள் மோதுண்டு விபத்துக்குள்ளாகியதில் தனியார் பஸ் சாரதி உட்பட அறுவர் காயங்களுடன் பசறை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று (18) பிற்பகல் 2.30 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து தொடர்பாக பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மஜீதிய்யா மகளிர் அரபுக் கல்லூரி

## பொலனறுவை

## மூன்றாவது பட்டமளிப்பு விழா






## கல்லூரியின் அதிபரிடமிருந்து...



பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள மஜீதியா மகளிர் அரபுக் கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவிற்கான சிறப்பு மலருக்கு ஒரு சில வார்த்தைகளை மனம் திறந்து பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நான் இக்கல்லூரியில் அதிபராக 2016ம் ஆண்டு டிசம்பர் மாதம் பொறுப்பேற்றுக் கொண்டேன். அந்த வகையில் அன்றுதொட்டு இன்றுவரை அல்லாஹ்வின் உதவியால் என்னால் முடியுமான சகல அர்ப்பணிப்புகளையும் கல்வியின் முன்னேற்றம் கருதி செய்து வருகிறேன். அத்துடன் என்னுடைய இச்சேவைக்கு மிகவும் பெறுமதியான உதவி ஒத்தாசைகளையும் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிவரும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிருவாக உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்ததுக் கொள்கின்றேன். அல்ஹம்துலில்லாஹ்!

அஷ்ஷெய்க் **ஏ.எல். பஷீர்** (ஷர்க்கி)
அதிபர்,
மஜீதிய்யா மகளிர் அரபுக் கல்லூரி

## தலைவரின் ஆசிச் செய்தி

### (முன்னாள் வடமத்திய மாகாண சபை உறுப்பினர்)



மஜீதியா மகளிர் அரபுக் கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு வெளிவரும் விஷேட மலருக்கு ஆசிச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ் !

இக்கல்லூரி 2013, 2018, வருடங்களில் இரு பட்டமளிப்பு விழாக்களை கொண்டாடியது போன்று 2022 இலும் மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் 67 ஆலிமாக்களையும் 30 ஹாபிழாக்களையும் கௌரவித்து அவர்களுக்குரிய பட்டமளிப்பு விழாவை நடாத்த கிடைத்தமையை பெரும் பாக்கியமென கருதுகிறேன். எதிர்வரும் காலங்களிலும் பல பட்டமளிப்பு விழாக்களை நடாத்தி அதிகமான ஆலிமாக்களையும் ஹாபிழாக்களையும் வெளிக் கொண்டு வருவதற்கு இக் கல்லூரியில் கடமை புரியும், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சக ஊழியர்கள், நிர்வாகிகள் முன்வரவேண்டுமென வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

எமது நிருவாகக் காலத்தில் இக்கல்லூரியின் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளையும் பௌதீக வளங்களையும் பெற்றுக் கொள்வதற்கு என்னோடு சேர்ந்து இயங்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறேன். அவர்களது சமூக பணிகளை இறைவன் பொருந்திக் கொள்வானாக!

அல்ஹாஜ் **எஸ்.எச்.எம். அன்சார்**
தலைவர், மஜீதியா மகளிர் அரபுக் கல்லூரி
பொலன்னறுவை.

## கல்லூரியின் வளர்ச்சி பற்றி செயலாளர்



அல்ஹம்துலில்லாஹ் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

எமது மகளிர் அரபுக் கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் இம் மலருக்கு கல்லூரியின் செயலாளர் என்ற வகையில் இப் பட்டமளிப்பு விழாவில் மௌலவியா பட்டம் பெறும் 67 மாணவிகளையும் ஹாபிழா பட்டம் பெறும் மாணவிகள் 30 பேரையும் மனமுவர்ந்த வாழ்த்துவதுடன் அவர்களின் நற்பணிகளை ஏக இறைவன் பொருந்திக் கொள்ள வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

மேலும் எமது மகளிர் அரபுக் கல்லூரியின் ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு பற்றி 2013ம் வருட 1வது பட்டமளிப்பு விழா சிறப்பு மலரிலும் 2018ம் வருட 2வது பட்டமளிப்பு விழா சிறப்பு மலரிலும் கல்லூரியின் செயலாளர் என்ற வகையில் தொகுத்து வழங்கிய போதிலும் இம்முறை நடாத்தப்படும் மூன்றாவது பட்டமளிப்பு விழா சிறப்பு மலரிலும் சுருக்கமாக கல்லூரி பற்றிய விளக்கத்தை சமர்ப்பிக்கின்றேன்.

1998ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பொலன்னறுவை மாவட்ட முஸ்லிம் பெண்களின் மார்க்க கல்வியுடன் கூடிய கல்வி மேம்பாட்டிற்காக மகளிர் அரபுக்கல்லூரி ஒன்றின் தேவையை கருத்திற் கொண்டு எமது மாவட்டத்தின் நலன் கருதி சதாவும் சிந்திக்கும் உலமாக்கள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், சமூக நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் பெண்கள் அரபுக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட வேண்மென ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவின் படி கல்லூரி பகுதி நேரமாக (1998.03.28) ம் திகதி ஸ்தாபிக்கட்டது.

ஆரம்ப கால ஸ்தாபகர்களாக அல்ஹாஜ் எஸ்.எச்.எம். அன்சார், அல்ஹாஜ் ஏ.சீ.எம். ஜஃபர் மௌலவி, அல்ஹாஜ் என்.எம்.எம். மஜீத் (ஓய்வு பெற்ற அதிபர்), ஜனாப் ஐ.எல்.எம். தௌபீக் (ஓய்வு பெற்ற கிராம சேவகர்), ஜனாப் ஐ.ஏ. உசனார் (ஓய்வு பெற்ற அதிபர்), மர்ஹூம் எஸ்.யூ. கால்தீன் , அல்ஹாஜ் பீ. ரவூப்தீன் (முஸ்லிம் சமூக கலாசாரத் திணைக்களம்) ஆகியோரை நினைவு கூருவதுடன் எம்முடன் அன்று முதல் இன்று வரை இயங்கி வரும் சகல பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக..

மேலும் 1998 மார்ச் 28 முதல் வாடகை கட்டிடத்தில் சுமார் 25 மாணவிகளுடன் பகுதி நேரமாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் நோக்கம் முழுமை பெறுவதாயின் விடுதியுடன் கூடிய கல்லூரி ஆரம்பிக்கப்படும் பட்சத்தில்தான் முழுமையான உச்சகட்ட பயனை அடைய முடியும் என்று கருதிய எமது பணிப்பாளர் சபை, 1999 கல்லூரிக்காக 80 பேச் காணி ஒன்றை தனவந்தர்களின் உதவியுடன் கொள்முதல் செய்ததுடன் 2000ம் வருடம் தனியான கட்டிடம் அமைக்கும் பணியை ஆரம்பித்தது. இச்சந்தர்ப்பத்தில் எமது கல்லூரியின் தேவையை கருத்திற் கொண்டு அல்ஹாஜ் மொஹிதீன் காதர் அவர்களின் வழிகாட்டலின் பேரில் அல்ஹாஜ் இல்யாஸ் கரீம், அல்ஹாஜ் சுலைமான் கரீம், அல்ஹாஜ் நைஷர் ஏ. காதர் ஆகியோர் 2004ம் வருடம் கல்லூரியை நேரடியாக விஜயம் செய்ததன் பயனாக எமது கல்லூரியின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் (கட்டிடம், சுற்று மதில்) சுமார் இருபது இலட்சம் ரூபா நிதியை பெற்றுத்தந்ததன் பயனாக இன்று இக்கல்லூரி தலை நிமிர்ந்து நிற்கின்றது.

2004 ம் வருடம் தேசிய மீலாத் விழாவின் நிமித்தம் எமக்கு 80 × 25 அளவிலான விடுதிக்கட்டடம் ஒன்று சுமார் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிடைத்தது. இக்கல்லூரி விடுதியுடன் கூடிய கல்லூரியாக 2005 செப்டம்பர் 05ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2010 வரையான காலப்பகுதி வரையில் தனியான நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்ததுடன் 2010 இறுதி காலப்பகுதியில் மஜீதிய்யா ஆண்கள அரபுக் கல்லூரியின் நன்மை கருதி இணைத்துக் கொள்ளப்பட்டது. அக்காலப்பகுதியில் மர்ஹூம் எஸ்.ஏ.ஏ. மஜீட் (மு.பா.உ) அவர்களின் தலைமையில் முன் எடுத்துச் செல்லப்பட்டதுடன் அக்காலப் பகுதியில் கல்லூரிக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகள் முன் எடுக்கப்பட்டது. மீண்டும் 2010ம் வருடம் இரு கல்லூரிகளும் தனித்தனியாக இயங்குவது மிகவும் சாலச் சிறந்தது என்று கருதி பணிப்பாளர் சபை மீண்டும் 2016 முதல் தனியான நிர்வாகத்தின் கீழ் இயங்க ஆரம்பித்தது.

அல்ஹாஜ் எஸ்.எச்.எம். அன்சார் (மு.மா.ச) அவர்களது தலைமையில் மிகவும் நேர்த்தியாக கல்லூரியின் பல்வேறுபட்ட அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டதை இக்கல்லூரியின் செயலாளர் என்றவகையில் எமது பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மேலும்

1. 2016 2017 காலப்பகுதியியில் 150 மாணவிகளுக்கான கட்டில் வசதிகள் லண்டன் பொலன்னறுவை நலன்புரி அமைப்பு மூலமும்
2. மேல் மாடி கிதாபு பிரிவுக்கான புனர் நிர்மானம்
3. 30 × 25 அளவிலான விடுதிக் கட்டிட புனர் நிர்மானம்
4. புதிய சமையல் அறைக் கட்டடம்
5. நிர்வாக காரியாலயத்திற்குரிய தளபாட வசதிகள்.
6. கட்டார் நலன்புரி அமைப்பு மற்றும் பொலன்னறுவை தலைவர்களினதும் அல்ஹாஜ் எஸ்.எச்.எம். அன்சார் (முன்னாள் மாகாண சபை உறுப்பினர்) மற்றும் மு.கா தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் ஆகியோரது நிதி ஒதுக்கீட்டுடன் 100 × 25 அளவிலான விடுதிக்கட்டடமும் அக்கட்டிடத்தின் மேல்மாடியில் கேட்போர் கூடத்திற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அக்கட்டிடத்தில் எமது கல்லூரியினது எமது தலைவரின் வேண்டுகோளின் பேரில் (கூரையை அமைத்துக் கொள்வதற்கு) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் (பிபிதெமு) பொலன்னறுவை வேலைத்திட்டத்தின் கீழ் 2017 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டு 2017 நவம்பரில் முடிக்கப்பட்டது. சுமார் 23 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 2018 ம் வருடம் கல்லூரிக்கு மிகவும் தேவையாக இருந்த நூலகம் சுமார் 7 இலட்சம் ரூபா நிதி செலவில் முடிக்கப்பட்டது. மேலும் பல்வேறு அடிப்படை வசதிகள் தேவையின் நிமித்தம் எமது நிர்வாக காலத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் எமது கல்லூரிக்கு மாணவிகளின் தேவை கருதி 13 பேர்ச் காணி 16 இலட்சம் ரூபா செலவில் கொள்முதல் செய்யப்பட்டு சுற்று மதில் என்பன பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டதுடன் எமது கல்லூரிக்கு நிரந்தர வருமானங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.எம். றவூப் (சட்டத்தரணி) குடும்பம் மூலமும் அல்ஹாஜ் எஸ்.ஏ.ஏ. சமட் குடும்பம் மூலமும் அதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்பட்டுள்ளது. அவர்களுடைய எண்ணங்களுக்குரிய நற்கூலியை ஏக இறைவன் வழங்குவானாக..

இப்படிக்கு,

**ஐ.எல்.எம். தௌபீக்** JP.
செயலாளர், மஜீதியா மகளிர் அரபுக் கல்லூரி

## பட்டம்பெறும் ஆலிமாக்கள்

### 2018 ம் ஆண்டு

| | |
|---|---|
| 1. M.I.பாத்திமா சாரா | முஸ்லிம் கொலனி |
| 2. R. பாத்திமா றுஸ்னா | முஸ்லிம் கொலனி |
| 3. N. ஹப்ஸா | தம்பாளை |
| 4. B. நஸ்றின் | கல்லேல்ல |
| 5. A. றிஸ்பானியா. | தம்பாளை |
| 6. M. ஹஸானா | சுங்காவில |
| 7. M. ஹஸீனா | சுங்காவில |
| 8. S.F. ஸமீமா பர்வின் | முஸ்லிம் கொலனி |
| 9. J. றிப்னா | ஓட்டமாவடி |
| 10. MB. நிஹா. | கட்டுவன்வில |
| 11. M. றஜீபா. | சுங்காவில |
| 12. N. நிப்ரா | ஜெயந்தியாய |
| 13. M.S. பாத்திமா ஸஸ்னா | மாணிக்கம்பிட்டி |
| 14. A.H.ம் அஸ்மிலா | கல்லேல்ல |

### 2019 ம் ஆண்டு

| | |
|---|---|
| 15. M. பாஹிமா. | குடாப்பொகுன |
| 16. U.அஸீனா | ஓட்டமாவடி |
| 17. A.B. துபாஆயிஷா. | முஸ்லிம் கொலனி |
| 18. H. ஹதீஜா நிப்ரா | சுங்காவில |
| 19. J. பாத்திமா அப்றா | ஓட்டமாவடி |
| 20. S. ஸன்ஸிதா | ஓட்டமாவடி |
| 21. A.B. பாத்திமா ஸஸ்னா | குடாப்பொகுன |
| 22. A. பாத்திமா றிஸ்கானி. | மாணிக்கம்பிட்டி |
| 23. H. பாத்திமா ஸப்னா. | குசுங்கம |
| 24. M.A. நுஸ்ரா. | முஸ்லிம்கொலனி |
| 25. N.F. ஜெஸ்னா | சுங்காவில |
| 26. M. ஸப்னா. | முஸ்லிம்கொலனி |
| 27. M.R. பாத்திமா பஸீஹா | ஏறாவூர் |
| 28. A.L. அப்ஸானா | ஓட்டமாவடி |
| 29. S.F. ரேஷ்மா | மருதமுனை |
| 30. R. றக்ஸானி | சுங்காவில |

### 2020 ம் ஆண்டு

| | |
|---|---|
| 31. A.R. பாத்திமா றிப்னா | தம்பாளை |
| 32. A.R. பாத்திமா ஆதிலா | வாழைச்சேனை |
| 33. A.R. நாதிரா இஷ்ரத். | அக்குரனை |
| 34. R.அகீலா பானு | ஏறாவூர் |
| 35. NF. நுஸ்கியா | கல்லெல்லை |
| 36. A.M. ஸிஹ்னாஸ் பானு | புதூர் |
| 37. A.N. பாத்திமா நிஹ்லா | ஓட்டமாவடி |
| 38. S. பாத்திமா றுஸ்தா | அநுராதபுரம் |
| 39. M. மஸீதா | அநுராதபுரம் |
| 40. S. பாத்திமா நுஸைபா | தம்பாளை |
| 41. R.F. மர்ஹானா | ஓட்டமாவடி |
| 42. R.F. அப்ரின் பானு | காத்தான்குடி |
| 43. A.F. ஸிம்ரா | கட்டுவன்வில |
| 44. A.M. மாஜிதா | கட்டுவன்வில |
| 45. J.பாத்திமா ரிழா | மாணிக்கம்பிட்டி |
| 46. J. ஸம்ஸியா | கட்டுவன்வில |
| 47. A. அஸ்னா பானு | தம்பாளை |
| 48. J. றுஸ்தா | கல்லேல்ல |
| 49. M.B. நுஸைபா | தம்பாளை |
| 50. J.F. நுஸ்ஹா | சுங்காவில் |

### 2021 ம் ஆண்டு

| | |
|---|---|
| 51. M.N. பைரூஸா | கட்டுவன்வில |
| 52. J.F. ஸஸ்னா | சுங்காவில |
| 53. A.G. பாத்திமா நிஹ்லா | கட்டுவன்வில |
| 54. M.B. பயாஸா பேஹம் | தம்பாளை |
| 55. A.J. பாத்திமா நகீபா | தம்பாளை |
| 56. T.F. ஹஸ்னா. | முஸ்லிம்கொலனி |
| 57. A.F. முஸ்ரிபா. | தம்பாளை |
| 58. M.A. நுபைஸா | அநுராதபுரம் |
| 59. M.F. நிபாஹிரா | கட்டுவன்வில |
| 60. F. பாத்திமா றிம்ஸா. | அநுராதபுரம் |
| 61. AR. ஸம்ரத் மனால் | கட்டுவன்வில |
| 62. A.F. ஸப்னா | கட்டுவன்வில |
| 63. I.F. இஜாஸா | தம்பாளை |
| 64. M.F. றுமைஸா | தம்பாளை |
| 65. A. வசீமா | கட்டுவன்வில |

### பணிப்பாளர் சபை

01. தலைவர்
அல்ஹாஜ் எஸ்.எச்.எம். அன்சார் JP (Former MPC)
02. உப தலைவர்
அல்ஹாஜ் எம். பசீர் அஹமட் JP
03. உப தலைவர்
அல்ஹாஜ் எஸ்.ஏ.ஏ. சமட் JP (President Mosque Federation)
04. பொதுச்செயலாளர்
ஜனாப் ஐ.எல்.எம். தௌபீக் (Former Gs)
05. உப செயலாளர்
அல்ஹாஜ் பி. றவுப்தீன் மௌலவி (Incharge Officer Muslim Cultural Department)
06. பொருளாளர்
அல்ஹாஜ் என்.எம்.ஏ. மஜீட் (Former Principal)
07. பணிப்பாளர்
அல்ஹாஜ் ஏ.ஸீ.எம். ஜஃபர் (மௌலவி) (Retired Teacher)

### உறுப்பினர்கள்

08. அல்ஹாஜ் எம்.எஸ். அஹமட் (Former ADB)
09. ஜனாப் எம்.எம். நிலாப்தீன் (ISA)
10. ஜனாப் என்.எம். முகைதீன் பாவா (Principal)
11. அஷ்ஷேஹ் ஏ.எல்.எம். ஜவாஹிர் (Sharqi) (காழி – நீதவான்)
12. ஜனாப் ஐ.எல்.எம். நஸார் (அதிபர்)
13. அஷ்ஷேஹ் ஏ.எல். ஜுனைதீன் ஆசிரியர்
14. அஷ்ஷேஹ் எம்.எம். அலாவுதீன் (பலாஹி)
15. அஷ்ஷேஹ் என்.எம். அபுல் ஹசன் (பலாஹி)
16. அஷ்ஷேஹ் எஸ்.யூ.எம். பைஸல் (மஜீதி)
17. அல்ஹாஜ் எம்.ஐ.எம். மன்சூர்
18. அல்ஹாஜ் ஏ.பீ.எம். ஹனீபா

### ஆசிரியர் குழாம்

| இல | பெயர் |
|---|---|
| 01 | அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எல்.பஷீர் (ஷர்க்கி) |
| 02 | அஷ் ஷெய்க் யு.எல்.எம். றியாழ்தீன் ( மஜீதி) |
| 03 | அல் ஆலிமா பீ.எம். முசானா (கல்லலி) |
| 04 | அல் ஆலிமா ஏ.எல்.எப். சிஹானா (சஹ்ராவி) |
| 05 | அல் ஆலிமா எம்.டி. நஸ்ரின் (மஜீதி) |
| 06 | அல் ஆலிமா எம். மஸீதா (மஜீதி) |
| 07 | அல் ஆலிமா ஏ.எப்.எப். அப்ஸா (ஹுதாவி) |
| 08 | அல் ஹாபிழ் ஏ.கே. சுஹைல் அஹமட்( மஜீதி) பீ.ஏ |
| 09 | அல் ஆலிமா எம்.ஏ. நுபைஸா (மஜீதி) |
| 10 | அல் ஆலிமா எம்.எப். ருமைஸா (மஜீதி) |
| 11 | ஆசிரியை எம். ஐ. ஹஸீமா பேகம் பீ.ஏ |

### ஊடகப் பொறுப்பதிகாரி

01 அஷ்ஷெய்க் பாரூக் எம். பாஸித் (மஜீதி)

### காரியாலய உதவியாளர்கள்

09 அல் ஆலிமா எம்.ஐ. சிபானா (மஜீதி) பீ.ஏ
10 அல் ஆலிமா ஏ.எஸ். அஸ்மியா (மஜீதி)

தகவல் உதவி :
**அல் ஹாஜ் எம்.என்.எம். மஜீத்**
(ஓய்வுபெற்ற அதிபர்),
அல் ஹாஜ் **பி. ரவூப்தீன்** (மஜீதி),
அஷ்ஷெய்க்.
**பாரூக் எம். பாஸித்** (மஜீதி).
( மாத்தளை சுழற்சி நிருபர் **சதூர்தீன்** )

# கிழக்கின் குரல்



# திருக்கோவில் பிரதேசத்தில் 1761 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை

## பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்





**திருக்கோவில் தினகரன் நிருபர்**

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 13 விவசாய கண்டங்களை உள்ளக்கியதாக 1761 ஏக்கர் நெற் செய்கைக்கு இம்முறை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ் விவசாய ஆரம்ப கூட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பெரிய நீர்ப்பாசன குளங்களான றூபஸ் மற்றும் கஞ்சி குடிச்சாறு குளங்களின் நீரிப் பாசனத்தைக் கொண்டு சிறுபோக நெற் செய்கைக்கான காணிகளின் எண்ணிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன. அந்தவகையில் தம்பிலுவில் நீர்ப்பாசன திணைக்களத்திற்குட்பட்ட றூபஸ் குள நீர்பாசனத்தின் கீழ் மூன்று கண்டங்களில் 514 ஏக்கர் காணியும், கஞ்சிகுடிச்சாறு குள நீர்ப்பாசத்தின் கீழ் 10 விவசாய கண்டங்களில் 1222 ஏக்கர் காணியும் வகிரந்தலாவ கண்டத்தில் பாரம்பரிய நெற் செய்கைக்காக 25 ஏக்கருமாக மொத்தம் 1761 ஏக்கர் இம்முறை சிறுபோக நெற் செய்கைக்கான காணிகளாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் இடப்போக நெற் செய்கைக்கான விதைப்பு காலமாக மார்ச் மாதம் 25ந் திகதி தொடக்கம் சித்திரை மாதம் 5ந் திகதி வரை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்முறை விசேடமாக பாரம்பரிய நெற் செய்கையினை ஊக்குவிக்கும் நோக்குடன் அரசின் கொள்ளைக்கு ஏற்ப வகிரந்தலாவ கண்டத்தில் 25 ஏக்கர் காணியில் பாரம்பரிய நெற் செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானமும் எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பண்ணையாளர்கள் தங்களது கால் நடைகளை மார்ச் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் யூலை மாதம் 29ஆம் திகதி வரை இவ் விவசாய கண்டங்களில் இருந்து அகற்றி விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்பு இல்லாதவாறு பராமரிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் காஞ்சரகுடா இராணுவ முகாம் இராணுவத்தினரால் இலவசமாக சேதன உரம் வழங்கப்படவுள்ளதுடன், அதற்கான சேதனப் பசளை உற்பத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் வகையில் விவசாயிகள் தமது உழவு இயந்திரங்களை வழங்கி உதவ வேண்டும்..

இக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், மாகாண நீர்ப்பாசனம் தம்பிலுவில் அலுவலக பொறியலாளர் பி.விகர்ணன், தம்பிலுவில் கமநல சேவைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.அஜந்தன், பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சந்தேக நபர்களை தேடி அக்கரைப்பற்று பொலிஸார் வலைவீச்சு

**அக்கரைப்பற்று மேற்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று குருந்தங்குளம் வயல் பிரதேசத்தில் தனது விவசாய காணிக்குள் சென்ற ஒருவர் மீது அங்கு வருகைதந்த அவரது சகோதரரும் அவரின் மகனும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) காலை 7 மணியளவில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த எம்.ஏ.அப்துல் பரீட் (62 வயது) அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தாக்குதலுக்குள்ளானவருக்கும் தாக்குதல் நடத்திய அவரது தம்பிக்கும் இடையில் இருந்த காணிப்பிரச்சினை தொடர்பாக இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது அவரது தம்பியான எம்.ஏ.அப்துல் அஸீஸ், அவரது மகன் ஏ.ஏ.அஸ்பாக் ஆகியோரே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றபோதும், சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கல்முனை சுகாதார பணிமனையில் குறுந்திரை படம் வெளியீடு

**பாலமுனை விசேட நிருபர்**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னோடி நடவடிக்கைகளில் ஒன்றான பணிப்பாளரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஊடக மற்றும் ஆய்வு, அபிவிருத்திக்கான பிரிவு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஊடகப்பிரிவின் தயாரிப்பில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட "தடுப்பியல்" குறுந்திரைப் படம், அண்மையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பளார் டொக்டர் எம்.பி.ஏ.வாஜித், திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், தொற்று நோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சி.எம்.பஸால் CERI நிறுவனத்தின் பணிப்பாளர் வீ.ஐ.தர்ஷன் மற்றும் சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய் பிரிவு மற்றும் ஊடகப்பிரிவு ஆகியன இணைந்து தயாரித்த குறித்த திரைப்படமானது, கொரோனா தொற்று மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் போது சுகாதாரத் துறையினரின் பங்களிப்புக்களை மையமாக வைத்தே தயாரிக்கப்பட்டுள்ளது. சிறந்ததொரு ஆவணமாகக் கருதப்படும் தடுப்பியல் குறுந்திரைப்படமானது UNICEF மற்றும் CERI ஆகிய நிறுவனங்களின் பூரண அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுணதீவில் பெண் உட்பட இருவர் கைது

**மட்டக்களப்பு குறுப் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் அனுமதிப் பத்திரமின்றி பதுக்கி வைக்கப்பட்டிருந்த சாராய போத்தல்களுடன் மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவில் பெண்ணொருவர் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்பின் பேரில் வவுணதீவு பிலாவெட்டுவான் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 180 மில்லி லீற்றர் எடை கொண்ட 10 சாராய போத்தல்களும் ஆணிடமிருந்து 3 சாராய போத்தல்களுமாக 13 போத்தல் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான நபர்கள் ஏறாவூர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# பிரச்சினையை தீர்க்க பல்கலைக்கழகங்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டும்

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் அபூபக்கர் றமீஸ்

**ஒலுவில், கல்முனை விசேட நிருபர்கள்**



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை பல்கலைக்கழங்கள் வழங்க வேண்டுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மன அழுத்தம் இல்லாத எதிர்காலம் எனும் தலைப்பில் செயலமர்வு புதன்கிழமை (16) பல்கலைக்கழக ஒலுவில் வளாக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில், அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சர்வதேச ரீதியாக காணப்படுகின்ற முக்கியமான பிரச்சினைகளை பேசக் கூடிய தளமாக பல்கலைக்கழகங்கள் திகழ வேண்டும். பல்கலைக்கழகங்களும் நூலகங்களும் அறிவை பரப்புகின்ற பணிகளை ஒரு படி மேலே சென்று செய்ய வேண்டும்.

பல்கலைகழகத்தில் கற்றல், கற்பித்தல் முதலாவதாக இருக்க வேண்டும், இரண்டாவதாக அறிவை பரப்புதல், மூன்றாவதாக பல்கலைக்கழகம் ஏனைய பிராந்திய நிறுவனங்களுடன் சேர்ந்து பல்கலைக்கழகத்துக்கு தேவையான விடயங்களை பெற்றுக் கொள்ள வேண்டும், அதேபோன்று பிராந்தியம், சமூக அமைப்பு, நூலகம் இன்னும் பல சமூக அமைப்புக்கள் போன்றவற்றிக்கு தேவையானதை பல்கலைக் கழகத்திலிருந்து அறிவை கொடுக்க வேண்டும்.

இச் செயலமர்வினை நடாத்த உதவிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அனைத்து வைத்தியர்கள் உட்பட நூலகர், சிரேஷ்ட நூலகர்கள், உதவி நூலகர்கள், நூலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம்.றிபாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ.வாஜீத் சிரேஷ்ட நூலர்கள், விரிவுரையாளர்கள், உயர் அதிகாரிகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வந்தாறுமூலையில் வீடு கையளிப்பு

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**

அடிப்படை வசதிகளற்று வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பமொன்றுக்கு வீடு வந்தறுமூலையில் புதன்கிழமை (16) வழங்கப்பட்டது.

மேல்மருத்தூர் அருள்மிகு ஆதிபராசக்கி சித்தர் பீடத்தின் சமூகநலன் பண்பாடு அறப்பணி மையத்தினால், மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 ஆவது வீடே பயனாளிக்கு கையளிக்கப்பட்டது. குறித்த அறப்பணி மையத்தின் மட்டக்களப்புக் கிளையினால் இவ் வீட்டுக்கான அடிக்கல் கடந்த 31.01.2022 நடப்பட்டது.

இதற்கான நிதி அனுசரணையினை சுவீஸ் நாட்டில் வசிக்கும் சக்தி குமுதா ஆனந்தன் மற்றும் சங்கீதா ஆனந்தன் சௌமியா ஆனந்தன், வர்சா ஆனந்தன் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# தீ அனர்த்தம் தொடப்பான விழிப்புணர்வு ஒத்திகை

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**





அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தீ அனர்த்தம் தொடப்பிலான விழிப்புணர்வு செயன்முறைப் பயிற்சி புதன்கிழமை (16) அக்கரைப்பற்று பஸ் தரிப்பு வளாகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, துறை சார்ந்த உயரதிகாரிகள், அரச தனியார் துறை அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தற்கால சூழ்நிலையில் அடிக்கடி பெருமளவில் நிகழ்ந்து வரும் தீ அனர்த்தத்தின் மூலமான இழப்புக்களையும் பாதிப்புக்களையும் குறைக்கும் வகையில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பில், அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை, பிரதேச செயலகம் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இவ் அனர்த்த முன்னெச்சரிக்கை விழிப்புணர்வுச் செய்முறைப் பயிற்சியின் போது, பெருந்தொகையான பொதுமக்களும் அரச தனியார் துறை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் போன்றோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

சமகாலத்தில் பல வர்த்தக நிலையங்கள், பொதுமக்களின் உடமைகள், சொத்துக்கள் போன்றன தீக்கிரையாக அழிவடைந்து வருவதுடன், உயிரையும் காவு கொள்ளும் தீ அனர்த்தத்தின் இழப்புக்களை குறைத்து மக்களை விழிப்படையச் செய்யும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தீ அனர்த்தத்தினால் பாதிப்புற்ற பிரதேசத்தின் நிலைமையினை முப்படையினரின் ஒத்துழைப்புடன் ஒழுங்குபடுத்தல், பாதிக்கப்பட்ட மக்களையும் உடமைகளையும் பாதுகாக்கும் தீயணைப்பு மற்றும் முதலுதவிச் செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொள்ளும் விதம் மற்றும் அனர்த்தத்தில் பாதிப்புற்ற மக்களை வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்கும் நடைமுறை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கும் செயற்பாடுகள் போன்றன செயன்முறை ஊடாக மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







கல்முனை சந்தான ஈஸ்வரர் சிவன் கோயில் வருடாந்த மகோற்சவ தேர் திருவிழா வெள்ளிக்கிழமை (18) நடைபெற்றது. பக்தர்கள் வடம் பிடித்து கல்முனை நகர் ஊடாக தேர் இழுத்து வரப்படுவதை படத்தில் காணலாம். படம்: நற்பிட்டிமுனை விசேட நிருபர்

# தினகரன் 90ஆவது ஆண்டு நிறைவு கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ளும் அணிகள்


























கலைக் கதம்பம்

சைத்திரியன்

# "தான் உற்ற காதல் நோய்க்கு அவளே மருந்து"

## குறுந்தொகை கூறும் காதல் இரசனை

அதிகாலையில் இளம் பெண்கள் துயிலெழுவது, அனைரும் இணைந்து குளிர்ந்த நீர்நிலைகளுக்குச் செல்வது, நீராடி நல்ல கணவனை தமக்கு அருளுமாறு நோன்பிருப்பது ஆகிய வழக்கங்கள் சங்ககாலம் தொட்டே தமிழ் மக்களிடையே இடம்பெற்று வந்துள்ளன.

எனினும் மார்கழி மாதத்திற்குப் பதிலாக தைத் திங்களில் இந்த நோன்பினை இளம் பெண்கள் மேற்கொண்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

தைத் திங்களில் நீர்நிலைகள் குளிர்ந்த நீரால் நிரம்பிக் கிடப்பது,ஆவணி மாதம் முதல் பெய்த மழையால் ஆறு குளங்கள் எல்லாம் நிரம்பி அதன் பிறகு பெய்த பனியாலும் வாடைக் காற்றாலும் தைத் திங்களில் நீர் நிலைகளெல்லாம் குளிர்ந்து காணப்படும்.

இந்தச் செய்தி புறநானூறு, குறுந்தொகை முதலிய சங்க இலக்கியங்களில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

தை இத் திங்கள் தண்கயம் போலக்கொளக் கொளக் குறையா கூழுடை வியனகர் (புறம்70)

தைத் திங்களின் தன்மையான குளம்போல அள்ள அள்ளக் குறையாத அன்னம் நிறைந்த வீடுகளை உடைய பெரிய நகரங்களை உடையதாம் கிள்ளி வளவனின் நாடு!

பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்

தை இத் திங்கள் தண்ணிய தரினும்வெய்ய உவர்க்கும் என்றனிற் (குறுந் 196)

"முன்பு வேம்பின் பசுங்காயைத் தந்தாலும் பூந்தேனின் இனிய கட்டி இது என்று போற்றிய நீங்கள் இப்போது தை மாதத்தின் குளிர்ந்து கிடக்கும் பாரியின் பறம்பு மலையிலுள்ள இனிய சுனை நீரைக் கொடுத்தாலும் வெம்மையாக இருக்கிறது. உவர்ப்பாக இருக்கிறது என்கின்றீர்!

உம்முடைய அன்பின் மாறுபாடே இதற்குக் காரணம்' என்று குறைபட்டுக் கொள்கிறாள் ஒருத்தி!

நற்றிணைப் பாடல் ஒன்று நல்ல கணவனைப் பெறவேண்டி தைத் திங்களில் குளிர்ந்த குளத்து நீரில் நீராடும் ஓர் இளம் பெண்ணை நமக்குக் காட்டுகிறது.

இழையணி ஆயமொடு தகுநாண் தடைதை இத் திங்கள் தண்கயம் படியும்பெருந்தோட் குறுமகள் அல்லதுமருந்து பிறிது இல்லை யான்உற்ற நோய்க்கே (நற்.80)

நாணம் மிக்க இளம் பெண்ணான அவள் தன் தோழிகளோடு கூடிச் சென்று தைத் திங்களில் குளிர்ந்த நீரால் நிரம்பிக் கிடக்கும் குளத்தில் நீராடி நோன்பிருக்கிறாள்.

"தான் உற்ற காதல் நோய்க்கு அவளே மருந்து' எனக் கூறுகிறான் காதலன்.

நோன்பு என்பது தான் கொண்ட நோக்கத்திற்காக தனக்கு நேரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் மன உறுதியாகும்.

நாணம் தடுத்ததால் அல்லவோ காதலனோடு புறப்பட்டுச் சென்றுவிடாமல் அவனைக் கணவனாக அடைய வேண்டி அவள் நோன்பிருக்கிறாள்.

மகளிர் பலர் கூடி நீராடும் தைத் திங்களின் குளுமையான குளம் போலக் காட்சியளிக்கிறதாம் அவன் மார்பு!

பரத்தையர் பலர் தழுவி மகிழ்ந்திட அவர்களுடன் பழகிவிட்டு இல்லம் திரும்பும் தலைவனை நோக்கி இவ்வாறு இடித்துரைக்கிறாள் தோழி!





"நீ அப்படிப்பட்ட ஒழுக்கமுடையவன் என்று யாரேனும் சொல்லக் கேட்டாலே வெகுளும் என் தலைவி இப்போது உன்னைக் காண நேர்ந்தால் என்னாகுவாளோ என்று சொல்லி வருந்துகிறாள். செவியிற் கேட்பினும் சொல்லிறந்து வெகுள்வோள்கண்ணிற் காணின் என்னாகுவள் கொல்?நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்தை இத் தண்கயம் போலப்பலர் படிந்து உண்ணும்நின் பரத்தை மார்பே (ஐங்.84)

இத்தகைய மகளிர் ஆடல், "அம்பா ஆடல்' எனப் பரிபாடலில் குறிப்பிடப்படுகிறது.

திருமணம் ஆகாத இளம் பெண்கள் தம் தாயார் அருகிருக்க நீராடுவதால், "அம்பா ஆடல்' என்று அழைக்கப்பட்டதாக தமிழறிஞர் பலர் விளக்கம் கூறுவர். "அம்பா' என்பதற்கு "அன்னை' என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது.

சில்லென்று பனி பெய்கின்ற தை மாதத்து வைகறைப் பொழுதில் இளம் பெண்கள் வைகை ஆற்றில் நீராடி, அதன் கரையோர மணற் பரப்பில் அந்தணர்களால் எழுப்பப்பட்ட வேள்வித் தீயின் வெப்பத்தில் தம் ஈர ஆடைகளை உலர்த்திக் கொள்ளும் காட்சியைப் பரிபாடலில் காண்கிறோம்.

இளம் பெண்கள் பூமியின் வெம்மை தீர்ந்து, மழை வளத்தால் குளிர்ச்சியடைவதற்காக இவ்வாறு நீராடினார்களாம்!

"வெம்பாதாக வியல்நில வரைப்பெனஅம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்பனிப் புலர்பு ஆடிப் பருமணலருவியின்ஊதை யூர்தர உறைசிறை வேதியர்நெறி நிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பின்தையல் மகளிர் ஈரணி புலர்த்தர' (பரி.118086)

உள்ளத்தில் உள்ள நோக்கம் நிறைவேறும் பொருட்டு துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு சில ஒழுக்கம், கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பது நோன்பு. என்றாலும் சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டவர்கள் என்பதால் இந்த தை நீராடல் நோன்பைக் கடைப்பிடித்தனர் என அறிய முடிகிறது.

அறிவியல் நோக்கிலும் மார்கழி தை மாதங்களில் "ஓசோன்' என்ற உயிர் வாழ்க்கைக்கேற்ற உன்னதமான வாயு குளிர்ந்த நீர் நிலைகளின் மேற்பரப்பில் பரவி இருக்கும் என்ற அறிவியல் உண்மை அறிந்தே அவ்வாறு செய்திருக்கிறார்கள் நம் முன்னோர்.

இரா.மலர்விழி...

# இளமை நினைவுகள்



அன்பே நீ அன்று
எழுதிய கடிதங்கள்
என சட்டைப் பையுள்
இத்துப்போய் கிடக்கின்றன

அந்தச் சட்டையை அணியாமல்
அசட்டையாய் இருந்ததனால்
எழுத்துக்கள் பொதும்பிப் போயின

மீள வாசிக்க முடியாததனால்
அலுத்துப் போனதுடன்
அசமந்தம் குடிபுகுந்துவிட்டது

இசைந்து வாழப்பழகி _ என்
இழைகள் எல்லாம் சுருங்கி
வயது முதிர்ந்த வார்த்தைகளால்
முதிர் நிலையின் முணுமுணுப்பு

அன்பு அறவொழுக்கம்
அடிச்சுவடாய்ப்போன நிலையில்
ஆரவாரங்கள் ஓடி ஒளிந்துவிட்டது

அன்பே அன்று எழுதிய கடிதம்
குழைந்து போனதால்தான்
குலைந்து போனேன் போலும்
நிலையிழந்த காலம் மாறி
நிறைகுறைந்து சருகான காலம்

உன் அழகும் என் இளவலிமையும்
அன்று போட்டிபோட்டது
நான் தோற்றுவிட்டேன்
நீ வென்றுவிட்டாய் என
நான் நினைத்ததுண்டு

இப்போதுதான் நினைக்கிறேன்
நாம் வென்று விட்டோம்
எம் இளமை நினைவுகள்
தோல்வியில் துவண்டு துடிக்கின்றன

கந்தளாய் முஸ்தபா சகாப்தீன்

# 'அந்தி பூத்த வைகறை' அட்டாளைச்சேனையில் வெளியீடு





ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய 'அந்தி பூத்த வைகறை' கவிதை நூல் வெளியீட்டு விழா அட்டாளைச்சேனை அல் ஷகி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கவிதை நூலினை வெளியிட்டு வைத்தார்.

கலைஞர் ஏ.எல்.அன்ஸார் சிறப்புரை நிகழ்த்தியதுடன், நூல் மீதான உரைகளை இலக்கிய ஆய்வாளர் எம்.அப்துல் றஸாக், விமர்சகர் சிறாஜ் மசூர் உள்ளிட்ட சிலரும் நிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

படங்கள், தகவல்: எம்.ஏ.றமீஸ்

# பத்துத் தலைகள் செம்மொழி உருவகம்

இராமன் படைகள் மீது இலங்கைப் படைகள் போர் தொடுக்க ஆயத்தமாகிறது. இலங்கை அரண்மனையில் நேர்மை உள்ளம் கொண்ட விபீடணனின் சகோதரன் இராவணனுக்கு அறிவுரை சொல்லியும் அவன் கேட்கவில்லை.



"சகோதரனே! இராமன் கடவுளின் அவதாரம். இராமனை அழிப்பது நம் குலத்திற்கே அழிவு. முடிவில் தர்மமே வெல்லும். கற்பில் சிறந்த சீதையை இராமனிடம் சேர்த்து விடு என விபீடணன் இராவணனிடம் வேண்டிக்கொண்டான். "தம்பி விபீடணா! எனக்கு எல்லாம் தெரியும். இராமன் ஒரு தலை உடையவன். நான் பத்துத் தலை உடையவன் என்றான் இராவணன். "அண்ணா ஒரு தலையாய் இருந்தால் நான் சொல்லும் அறிவுரை ஏறும். பத்துத் தலைகளுக்கும் என்னால் எப்படிச் சொல்ல முடியும்?"

"சொல்லிப் பாரேன்..." என்று இராணவன் தம்பியை ஏறிட்டு நோக்க வீடணன் உரைத்தான்.

அண்ணா நீ சீதையிடம் கொண்டிருப்பது.... ஒருதலை ஆசை என்கிறாய். உன் மனம் நல்வழியில் இருத்தலை "எங்களில் மூத்தவன் நீ இருந்தும் உனக்கு அறிவு என்பது" "முத்தலை" இராமனிடம் நீ... "அஞ்சுதலை" இல்லாதவன் நீ தோற்கப்போகிறாய் நான் அப்பொழுது என்ன செய்வேன். "ஆறுதலை என்கிறாயா" "ஆமாம் படைத்த பிரமன் உன் தலைகளில் நல்லபடி.... "எழுதலை" மொத்தத்தில் எனக்கு அறிவே "பத்தலை" என்பாய். ஆமாம் அண்ணா விதியை யாரால் வெல்ல முடியும் என்று மனம் வருந்திய வீடணன் தன் வழி சொல்லத் தொடங்கினான். "நில் விபீடணா" என நின்றான் விபீடணன்.

பத்துத் தலைகளில் எட்டுத்தலைகளுக்கும்



பதில் சொல்லி விட்டேன். இன்னும் இருதலைகளைப் பற்றி ஏதும் நீ கேட்கவில்லையே" "ஆமாம் உன் நான்காது தலை பற்றியும் ஒன்பதாவது தலை பற்றியும் நான் கேட்கவில்லை நீயே சொல் அண்ணா"

"சொல்கிறேன்... எனக்காரு கையாய் இருந்த நீ தர்மமே பெரிதென்று பிரிந்து செல்கிறாய். ஆனால் என் தலைமையே பெரிதென்று என்னுடன் இருக்கின்ற என் மகன் இந்திரஜித்தும் என் அருமைத் தம்பி கும்பகர்ணனுமே அந்த இரு தலைகள். என் ஆணையைத் சிரமேற் கொள்ள இந்த இரு தலைகள் போதும்" என இராணவனன் பதிலுரைத்தான். விபீடணன் தலை குனிந்து நடந்தான்.

கல்லொளுவை பாரீஸ்...

# "யாவரும் கேளிர்" தமிழ்ச் சங்கத்தில் நூல் வெளியீட்டுவிழா





ஞானம் சஞ்சகையின் ஆசிரியர் தி.ஞானசேகரன் தினகரன் வார மஞ்சரியில் தொடராக எழுதிய "யாவரும் கேளிர்" என்றதொடரின் தெர்ந்தெடுக்கப்பட்ட சில கட்டுரைகளைக் கொண்ட நூல் "யாவரும் கேளிர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் தி.ஞானசேகரனின் 80ஆவது அகவையை முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்திய இலக்கியப் போட்டிகளின் பரிசளிப்பும் இந்த விழாவில் இடம்பெறவுள்ளது.

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு தினகரன் மற்றும்தினகரன் வாரமஞ்சரியின் பிரதமஆசிரியர் தே.செந்தில்வேலவர் தலைமை தாங்கவுள்ளார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டப்ளியு. தயாரத்ன கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் சோ. சந்திரசேகரம்,கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் நிகழ்விற்குமுன்னிலைவகிப்பார். நூல் அறிமுகவுரையை திருமதி பவானி முகுந்தன் நிகழ்த்துவார். ஞானம் சஞ்சிகைநடத்திய அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பும் நடைபெறவுள்ளது. (ஸ)





ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர் ஆலய மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை சிறப்பாக நடைபெற்றது. (படப்பிடிப்பு: வத்தளை விசேட நிருபர்)





கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர் சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. கோபுரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும், நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு வடக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான்ட், நிலைய பொறுப்பதிகாரி கோச நவரடெட்ன ஆகியோருக்கான கௌரவத்தை தர்மகர்த்தா வி. சுகுமார், மற்றும் பி. சிவயோகநாதன் ஆகியோர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாதுக்கை, கலகெதர முஸ்லிம் வித்தியாலயத்தில் சித்திபெற்றுள்ள எம்.ஐ,எம். இன்ஷாப் (164) மற்றும் எம்.ஆர்.எம்.ரஷாத் (155) ஆகியோர் அதிபர் எம்.எம்.எம்.நவாஸ். பிரதி அதிபர் என். மஹ்தி ஹசன் மற்றும் வகுப்பாசிரியை எம்.எப்.எஸ். பாஹிமா ஆகியோருடன் எடுத்துக்கொண்ட படம்.

### அ.இ.ஜம்இய்யதுல் உலமாவின்

# களுத்துறை மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா களுத்துறை மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 20ஆம் திகதி காலை 9.00 மணி முதல் பாணந்துறை, ஹேனமுல்லயிலுள்ள செரண்டிப் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக ஜம்இய்யாவின் மாவட்ட கிளைச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். பர்ஹான் (நளீமி) தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அனைத்து களுத்துறை மாவட்ட கிளை உலமாக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களது முகவரிக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார். இதுவரை கடிதங்கள் கிடைக்கப்பெறாதோர் அந்தப்பிரதேச சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் பகல் போசனமும் இதன்போது கலந்துகொள்ளவுள்ளோருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை**

**(கைத்தொழில் அமைச்சு)**

## வெற்றிடங்கள்

கைத்தொழில் அபிவிருத்தி சபையானது இலங்கையில் கைத்தொழில் துறையை ஊக்குவித்தல், முன்னேற்றல் மற்றும் மேம்படுத்தலுக்கு பொறுப்பான 1969 இன் 36 ஆம் இலக்க சட்டம் மூலம் நிறுவப்பட்ட முன்னணி அரச துறை நிறுவனம் ஒன்றாகும்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையில் வெற்றிடமாக உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

### 01. அகநிலைக் கணக்காய்வாளர் பதவி - (MM 1-2) - (பதவி 01)

**தொழில் விபரம்**

சபையின் அகநிலைக் கணக்காய்வு செயற்பாட்டை முழுமையாக மேற்பார்வை செய்தல், சபையில் முறையான அகநிலைக் கட்டுப்பாட்டு முறைமையை பேணும் பொருட்டு சுயாதீனமான கணக்காய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் FR 133 மற்றும் 134 இன் கீழ் சபையின் தலைவருக்கு நேரடியான பரிந்துரைகளுடன் கண்காணிப்புகளை அறிக்கையிடல், வருடாந்த அகநிலை கணக்காய்வு திட்டம் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தல், ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தின்படி கணக்காய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல், அது பற்றி அவ்வப்போது மீளாய்வு செய்தல், நிறுவப்பட்ட கொள்கையுடன் இணங்குதல் மற்றும் சபையின் கணக்காய்வு திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு, தற்போதுள்ள கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்தல்/ இற்றைப்படுத்தலுக்கு பரிந்துரைகளை செய்வதற்கு பெறுப்பாக இருப்பார்.

**கல்வி/ தொழில்முறை தகைமை (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கணக்கியல்/ நிதி/ வர்த்தகத் துறையில் இளமாணிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் குறைந்தது 03 ஆண்டுகள் தகைமைக்குப் பின்னராக அனுபவத்துடன் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) தகைமை.

**அல்லது**

2. தொடர்புடைய துறையில் குறைந்தது 03 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவத்துடன் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (ICASL)/ UK முகாமைத்துவ கணக்காளர் பட்டய நிறுவனம் (CIMA)/ சான்றளிக்கப்பட்ட மற்றும் கூட்டு நிறுவன கணக்காளர்களின் சங்கத்தின் (ACCA) இடைநிலை தகைமை.

### 02. உதவிப் பணிப்பாளர் பதவி (சட்டம்) - (MM 1-2) - (பதவி 01)

**தொழில் விபரம்**

சபையின் சட்ட செயற்பாடுகளுக்காக நிர்வாகப் பணிப்பாளருக்கு உதவுதல் (உடன்படிக்கைகள், முறிகள், தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் ஏனைய ஒழுங்கு விடயங்கள், தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய சட்ட அமைப்புகளில் சபையை பிரதிநிதித்துவப்படுத்தல்).

**கல்வி/ தொழில்முறை தகைமை (கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெறப்பட்ட LLB பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் சட்டத்தரணியாக குறைந்தது 03 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**அல்லது**

2. சட்டத்தரணியாக இருத்தல் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது 03 ஆண்டுகள் பதவிக்கு பின்னரான அனுபவம்.

**வயதெல்லை** : 22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : **MM 1-2:** ரூபா **54,550 – 1,375 x 10 – 1,910 x 15 – 96,950/-**

**வசதிகள் மற்றும் நன்மைகள்**

- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்
- ஊழியர் மற்றும் குடும்பத்தின் மருத்துவ செலவுகளை மீள் அளிப்பு
- ஆண்டு மிகையூதியம்
- சலுகை வட்டி வீதத்தில் இடர்கடன்
- அக்ரஹார காப்புறுதித் திட்டம்

**பொது நிபந்தனைகள்**

1. பதவியணியில் இது ஒரு நிரந்தரப் பதவியாகும்.
2. பதவிக்கு தேர்வு செய்யப்படும் அபேட்சகர், ஊழியரினால் 10% மற்றும் சபை மூலம் 12% ஆக EPF பங்களிப்புக்கு உரித்தாவார். இதனைத் தவிர சபை மூலம் ETF பங்களிப்பாக 3% அளிக்கப்படும்.
3. பிறப்புச் சான்றிதழ், கல்வி, தொழில்முறை, அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உங்களது சுயவிபரக்கோவை மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் விபரங்களுடனான விண்ணப்பத்தை 2022.04.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.
4. அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளைச் சேர்ந்த அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனங்களின் தமது தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
5. மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பாக கருதப்படும்.

**தலைவர்**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை**
**615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை.**


## முகத்துவாரம் வெங்கடேஸ்வர ஆலய மண்டபத்தில் கண் பரிசோதனை

மகா விஷ்ணு லயன்ஸ் கிளப் ஒப் கோல்ட் சிட்டியின் திட்டத் தலைவர் (Project Chairperson) பொன்.பத்மநாதனின் ஏற்பாட்டில் நாளை 20ம் திகதி காலை 8.00 மணிக்கு கொழும்பு முகத்துவாரம் வெங்கடேஸ்வர மகா விஷ்ணு கோயில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி மண்டபத்தில் தேசமான்ய துரைசாமி செட்டியார் அவர்களின் வழிகாட்டுதலில்,ஸ்ரீ ஐயப்பன் உதவும் கரங்கள் அறநெறி பாடசாலையில் கல்வி பயிலும் 350 மாணவ மாணவிகளுக்கு கண் பரிசோதனை முகாம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் வலயத் தலைவர் (Zone Chairperson) நினேஸ் அமிர்தைய்யா, கழக தலைவர் சொ, செந்தில்குமார், செயலாளர் எஸ்,சதாசிவம், பொருளாளர் எஸ். மனோகரன், ஐயப்பன் உதவும் கரங்களின் ஸ்தாபகர் ப.க. வாசன், மன்றச் செயலாளர் ச. அனுஷா, தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியர் கே. ஈஸ்வரலிங்கம் ஆகியோரும் கழக அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## குளத்திலிருந்து சடலம் மீட்பு

புத்தளம் மஹகும்புக்கடவல ஹொரகஹயாய பகுதியிலுள்ள குளமொன்றில் மிதந்த நிலையில் நபர் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

படபொல, கிதுல்கஹகல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மஹகும்புக்கடவல ஹொரகஹயாய பகுதியிலுள்ள குளத்தில் சடலம் ஒன்று கிடப்பதாக மஹகும்புக்கடவல பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஆனமடுவ பதில் நீதவான், சம்பவ இடத்தில் நீதவான் மரண விசாரணையை முன்னெடுத்ததுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## கலந்துரையாடல்

புத்தளத்தில் "மொழியே எங்கள் உறவு, மொழியும் அடிப்படை உரிமையே" என்னும் தொனிப் பொருளில் விஷேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் புத்தளம் கே.ஏ.பி. ஞாபகாத்த மண்டபத்தில் இடம் பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

விழுது அமைப்பின் கருத்திட்ட அதிகாரி ஆர்.சுகுனா நெறிப்படுத்தலில் நடைபெற்ற கலந்துரையாடலில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டார்.





கொழும்பு 13, புதுச்செட்டித் தெரு சீரடி சாயி மந்திர் இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சிவஸ்ரீ லக்ஷ்மிகாந்த ஜெகதீசன் குருக்களின் கணபதி ஹோம சமய கிரிகைகளை அடுத்து கோபுர கலசத்திற்கான கும்பாபிஷேகம் நடைபெற்றது, தலைவர் எஸ்.என். உதயநாயகம் தலைமையில் தொடர்ந்து கஜமுக பூஜையுடன் ஆலய கதவு திறக்கப்பட்டு கோமாதா பூஜை நடைபெற்றது. ஆலய கும்பாபிஷேக படிமக்கல்லினை சென்னை மைலாப்பூர் சீரடி சாயி பாபா ஆலயம், அகில இந்திய சாய் சமாஜத்தின் தலைவர் கே. தங்கராஜ், திரை நீக்கம் செய்து வைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பக்தர்களையும் காணலாம்.

(படங்கள்: வத்தளை விசேட நிருபர்)



புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் 2022. விருது வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (17) மாலை கொழும்பு 13 விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த புரவலர் ஹாசிம் உமர் வெற்றி பெற்ற அனைவர்களுக்கும் விருது வழங்கி வைத்தார். புதிய அலைகலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா, தலைவர் சண்முகம் (ஷண்மு), பொது செயலாளர் திருமதி சுபாஷினி பிரணவன் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.

# நுவரெலியா பிரதேச சபை

## வாகனங்கள் விற்பனை செய்வதற்கான ஏல அறிவித்தல்

நுவரெலியா பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாவனையிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள் விற்பனை செய்வதற்காக ஏலமிடப்படவுள்ளது.

2022.03.18ம் திகதி தொடக்கம் 2022.04.06ம் திகதி வரையான காலப்பகுதியில் மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப. 03.00 வரை சாதாரண வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் திரும்ப செலுத்தப்படும் ஏலத் தொகை மற்றும் திரும்ப செலுத்தப்படாத ஏலவிற்பனை ஆவணங்கள் வைப்பு தொகை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நுவரெலியா பிரதேச சபையின் நானுஓயா காரியாலயத்திற்கு செலுத்தி ஏல விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் அக்கொடுப்பனவுகளுக்காக காரியாலயத்தினால் வழங்கப்படும் பற்றுச் சீட்டினை ஏலம் கோரும் ஆவணத்தில் குறிப்பிட்டு பற்றுச் சீட்டினை அதனுடன் இணைக்கப்பட வேண்டும். ஏலதாரர் அல்லது அவரது முகவரினால் ஏலத்தில் பெற்றுக் கொண்ட வாகனத்தை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அல்லது தெரிவு செய்யப்படும் ஏலதாரருக்கு அல்லது அவரது முகவருக்கு வைப்பு பணத்தினை திரும்ப பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் இப்பற்றுச்சீட்டு மிகவும் அவசியமாக தேவைப்படும்.

01. 2022.03.18ம் திகதி தொடக்கம் 2022.04.06ம் திகதி வரையான காலப்பகுதியில் மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப. 03.00 வரை நுவரெலியா பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தின் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடத்தில் வாகனங்களை பரிசோதித்து பார்க்க முடியும்.
02. வாகனங்களுக்காக ஏல விண்ணப்ப படிவத்தினை பெற்றுக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய வைப்புத் தொகை

    திரும்ப செலுத்தப்படும் ஏல வைப்புத் தொகை - ரூபா. 5000.00

    திரும்ப செலுத்தப்படும் ஏல வைப்புத் தொகை - ரூபா. 1500.00
03. பூர்த்தி செய்யப்பட்ட முத்திரை இடப்பட்ட ஏல விண்ணப்பங்கள் 2022.04.07ம் திகதி காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், நுவரெலியா பிரதேச சபை, நானுஓயா. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது நேரடியாக பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏல விண்ணப்ப படிவத்தினை இடும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வாகனம் விலைக்கு பெற்றுக் கொள்வதற்காக ஏலம் கோரல் என எழுதப்படுதல் வேண்டும்.
04. ஏல விண்ணப்பம் திறத்தல் 2022.04.07ம் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறும்.
05. ஏல விற்பனை தொடர்பான முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனே தெரிவு செய்யப்பட்ட ஏலதாரரினால் ஏலத் தொகையினை முழுவதுமாக செலுத்தி அன்றைய தினமே வாகனத்தினை கொண்டு செல்லுதல் வேண்டும்.
06. இந்த ஏல விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானங்கள் தொடர்பில் கேள்விக் குழுவே உரிமை கோரும்.
07. மேலதிக தகவல்களுக்கு 052-2229822 எனும் இலக்கத்தினை தொடர்பு கொள்வதினூடாக நானுஓயா அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| தொடர் இலக்கம் | பதிவு செய்யப்பட்ட எண் | வாகன வகை | உற்பத்தி திகதி |
|---|---|---|---|
| 01 | HP-0640 | Bajaj Boxer Moter Cycle | 2003 |
| 02 | RW-6980 | Tractor Trailer | 2012 |
| 03 | 49-1972 | Kuboto Tractor (4 Wheeler ) | 1992 |
| 04 | RA-7104 | Same Tractor | 2007 |
| 05 | PB-9115 | Universal Dila Purpose Cab | 2009 |

**திகதி - 2022.03.15**

**வேலு யோகராஜ்**
**தலைவர்**
**நுவரெலியா பிரதேச சபை**

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான, பெறுகைக் கோரல் அறிவித்தல் 2022.03.19 சனிக்கிழமை மற்றும் 2022.03.23 புதன் கிழமையன்று டெயிலி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

1. **REFURBISHMENT OF 2000 M3/DAY CAPACITY WATER TREATMENT PLANT AT HORANA EXPORT PROCESSING ZONE**

   **CONTRACT NO: BOI/TS/HEPZ/2022/02/08.02.033**
2. **SUPPLYING AND LAYING OF WASTE WATER PUMPING LINE FROM LOT NO. S4 AT HORANA EXPORT PROCESSING ZONE**

   **CONTRACT NO. : BOI/TS/HEPZ/2022/01/08.03.025**

மேற்படி பெறுகைக்கான, விலைமனுப்படிவங்கள், ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள், 2022.03.19 சனிக்கிழமை மற்றும் 2022.03.23 புதன் கிழமைகளில் டெயிலிநியூஸ் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் பெறுகைக்கான பெறுகை அறிவித்தல் 2022.03.19 சனிக்கிழமை மற்றும் 2022.03.21 திங்கற் கிழமையன்று டெயிலி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**CONSTRUCTION OF PERIMETER BARBED WIRE FENCE ALONG THE EASTERN BOUNDARY BORDERING TO VILLAGE, BINGIRIYA EXPORT PROCESSING ZONE**

**Contract No. BOI/TS/BgEP2/2022/07/08.003**

மேற்படி பெறுகைக்கான, விலைமனுப்படிவங்கள், ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள், 2022.03.19 சனிக்கிழமை மற்றும் 2022.03.21 திங்கற் கிழமைகளின் டெயிலி நியூஸ் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**



BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT



LAKE HOUSE


### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பாரை மாவட்ட நிந்தவூர் பற்று 12ம் குறிச்சி 1ம் குறுக்குத் தெரு, 76,எனும் முகவரியில் வசிக்கும் **அப்துல் அஸிஸ் முஹம்மட் பாயிஸ் தே.அ.அ.இல. 861322343V** ஆகிய நான் எனது தாயான **மீராலெவ்வை சித்தி ஹபீபா தே.அ.அ.இல. 655963715V** என்பவவுடன் சேர்ந்து நிந்தவூர்-12, வன்னியார் வீதி, இல:206A ஐச் சேர்ந்த **அப்துல் கபூர் முஹம்மட் சுஹூட் தே.அ.அ.இல. 572952568V** என்பவர் பெயரில் பிரசித்த நொத்தரசி **A.L.நசீல்** அவர்கள் முன்பு எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.03.12.ம் திகதியில் 1123 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்டதும் பதிவாளர் நாயகத்தின் மட்டக்களப்பு பதிவாளர் நாயக அலுவலகத்தில் 2018.03.21ஆம் திகதி தொடரிலக்கம் 155இல் 15ஆம் இதழில் 26ஆம் இலக்கப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் 2022.03.10 முதல் மீளப்பெறப்படுவதோடு இன்று முதல் மேற்குறித்த அற்றோணித்தத்துவ பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவிக்கிறோம்.

**அப்துல் அஸிஸ் முஹம்மட் பாயிஸ்**

# விலைமனு அழைத்தல் (IFB)

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## 2021/2022ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடுகளை அச்சிட்டு வழங்கல்
## கல்வி ஆண்டு 2021/2022
### (ஒப்பந்த இலக்கம்: UGC/Admin/3

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பாக, திணைக்களப் பெறுகைக் குழுத்தலைவர், பின்வரும் எண்ணிக்கையிலான பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடுகளை அச்சிட்டு வழங்குவதற்காக முன்னணி அச்சகங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.


| | மொழி மூலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிங்களம் | 72,500 |
| 02 | தமிழ் | 17,500 |
| 03 | ஆங்கிலம் | 5000 |

02. விலைமனுவானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
03. இதற்காக ஆர்வமும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள், கொழும்பு 07, வோட்பிளேஸ், இலக்கம் 20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிருவாகப் பிரிவில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை இலவசமாக விலைமனுப்படிவங்களையும் மாதிரிகளையும் பரிசீலித்துப் பார்க்கலாம். தொ.பே. இலக்கம் 011-2685183 மூலம் மேலதிக தகவல்களை பிரதிச் செயலாளர்/ பொது நிருவாகம் இடம் பெற்றுக் கொள்ளலாம்.
04. தேவையான தகைமைகள்:
    - I மூன்று (3) வருட கால வியாபாரப் பதிவைக் கொண்டுள்ள Offset அச்சு வசதியுள்ள அச்சகங்கள் விண்ணப்பிக்கலாம்
    - II. இதற்காகப் பயன்படுத்தப்படும் காகிதங்கள் மற்றும் Art board கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விலைமனு நிபந்தனைகளிற்கமைவாகவும் உரித்தான தராதரத்திற்கமைவாகவும் இருத்தல் வேண்டும். (A4 Paper - 80 GSM, Art board - 230 GSM)
    - III. உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியின் 50% இற்கான செயற்பாட்டு முதலீட்டு ஆற்றல் விலைமனுதாரருக்கு இருத்தல் வேண்டும். இதனை (2020/2021) கடந்த ஆண்டின் கணக்காய்வு நிதிக்கூற்றின் மூலம் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
    - IV. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் அச்சகமானது நடைமுறை சட்டவிதிகள் மற்றும் ஒழுக்கு விதிகளின் பிரகாரம் சம்பளம் வழங்கள் EPF, ETF மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் போன்றவற்றிற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
    - V. கடந்த 2 ஆண்டுகளில் திருப்திகரமாகப் பூரணப்படுத்தப்பட்ட நிகரான தரத்திலான 4 அச்சு வேலைகளின் மாதிரிகள் (குறைந்தபட்சம் 100 பக்கங்களைக் கொண்ட புத்தகங்கள்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    - VI. விலைமனுதாரர்கள் ஒப்பந்தங்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்கான நவீன தொழில்நுட்பம் மற்றும் ஆளணிச் சூழல் இருப்பதனைக் கண்டிப்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும். (விலைமனுதாரரினால் அச்சு வேலைகளில் உபயோகப்படுத்தப்பட்ட அச்சு இயந்திரங்களின் விபரங்களும் விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)
05. மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா ஐயாயிரம்) ரூபா 5000/- இற்கான தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 2022 மார்ச் 18 முதல் 2022 ஏப்ரல் 06 வரை மு.ப. 9.30 மற்றும் பி.ப. 3.00 இடைப்பட்ட காலத்தில் வார வேலை நாட்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிச் செயலாளர்/பொது நிருவாகம் இடம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப்படிவத் தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். கொடுப்பனவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிறாப்பருக்குக் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. 2022 ஏப்ரல் 07ஆம் திகதி பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. கொழும்பு -07 வோட்பிளேஸ், இலக்கம் 20, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சபை மண்டபத்தில் 2022 ஏப்ரல் 07ஆம் திகதி விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
08. 2020.10.28ஆம் திகதி இடப்பட்டதும் 5:3:11 இலக்கமுள்ள பெறுகை வழிகாட்டியின் 36வது இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முகவராண்மை ஒன்றிலிருந்து பெறப்பட்டதும் விலை மனுக்கள் மூடும் திகதியிலிருந்து 90 நாட்கள் காலப் பகுதிக்குச் செல்லுபடியாகும் தன்மையில் உள்ளதுமான மீளளிக்கப்படும் உத்தரவாத மாகிய 2 இலட்சம் ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கிறாப்பரிடம் ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
09. விலைமனுக்கள் அனைத்தையும் அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்றுக் கொள்ளும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும். மற்றும் ஆகக் குறைந்த பெறுமானமுள்ள விலைமனுவை ஏற்றுக் கொள்வதற்கான கடப்பாடு இல்லை.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு.**
**பலக்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு -07.**

2022 மாாச் 18ஆம் திகதி


சிறு விளம்பரம்



வேலைவாய்ப்பு

325



தொழில்துறை
பொது


கட்டுமானப் பணிக்கு கூலி வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தொடர்பு கொள்வதற்கு: 0775497185, 0760095539, 0783307979. 020995

# பெறுகை அறிவித்தல்

## இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய இளைஞர் படையணியின் தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு

### 2022 மே 01ம் திகதி முதல் 2022 டிசம்பர் 31ம் திகதி வரை

சமைத்த உணவு வழங்குவதற்கான தேசிய போட்டி கேள்வி கோரல் இல. 02 தேசிய இளைஞர் படையணியின் தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்கு 2022.05.01 முதல் 2022.12.31 வரையான கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட சமைத்த உணவு வழங்குவதற்கு தகைமையுள்ள உணவு வழங்குநர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி கோரல் செயற்பாட்டினை பின்பற்றி தேசிய இளைஞர் படையணி பெறுகைக்குழு (பிரதான) இன் தலைவரால் 2022.03.19 முதல் 2022.04.11 வரை இத்தால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ./ இல. | மத்திய நிலையம் | பயிற்சியாளர் எண்ணிக்கை | மாகாணம் | மத்திய நிலையம் பொறுப்பாளரின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை | 125 | மத்திய | லெப்கோணல் ஏ.பீ. லியனகே | இனாமலுவ தம்புள்ள | 066-2286177 |

1. 2020.01.01 தினத்தின் பின்னர் பெற்றுக்கொண்ட உணவு பானங்கள் வழங்குதல் பற்றி குறைந்த பட்சம் ஒரு வருட அனுபவத்தை உறுதி செய்வதுடன் சம்பந்தப்பட்ட கேள்விதாரர்களால் உண்மைப் பிரதியென உறுதி செய்த ஆவணங்களின் போட்டோப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

   விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது சமைத்த உணவுகள் வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட பதிவு செய்துள்ளதாக உறுதி செய்யும் கீழ்க்காணும் ஆவணங்களின் 0/ஐ கேள்விதாரர்களால் உண்மைப் பிரதியென உறுதி செய்ய போட்டோப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

   i) பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட வியாபார பதிவு செய்தல் சான்றிதழ் அல்லது

   ii) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட கூட்டிணைப்பு சான்றிதழ் மற்றும் அவ் அமைப்பு அகவிதிகள் (Article of Association) அல்லது

   iii) 2022ஆம் ஆண்டிற்காக மாகாண நிர்வாக நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட வர்த்தக அனுமதிப்பத்திரம்
2. தேசிய இளைஞர் படையணி தம்புள்ள ஹோட்டல் பயிற்சி பாடசாலைக்கு சமைத்த உணவு வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட ஒரு கேள்விப் பத்திரத்திற்காக மீளளிக்கப்படாத ரூ. 5,000.00 கேள்விக் கட்டணத்தை தேசிய இளைஞர் படையணியின் கணக்கு இலக்கத்தின் காசாளரிடம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை பெறுகைப் பிரிவிலிருந்து சமர்ப்பித்து 2022.03.19 முதல் 2022.04.08 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2022.04.11ம் திகதி மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு, தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதான), தேசிய இளைஞர் படையணித் தலைமையகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு-07, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இளைஞர் படையணி தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் திறத்தல் 2022.04.11 மு.ப. 11.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டவுடன் இடம் பெறும். அவ் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
4. 2022.04.11 மு.ப. 11.00 இன் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
5. கேள்விதாரரால் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து ரூ. 202,300.00 பெறுமதிக்கு சமமானதாகவும் 2022.04.11 அல்லது அதற்கு முன்னரான திகதியில் இருந்து 2022.08.08 வரை செல்லுபடியாகுமாறு தலைவர்/ பணிப்பாளர், தேசிய இளைஞர் படையணி, இல. 420, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு-07 பெயரில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. இது பற்றி முன் தெளிவுபடுத்தல் கலந்துரையாடல் 2022.03.30ம் திகதி மு.ப. 11.00 இற்கு தேசிய இளைஞர் படையணி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
7. இது பற்றிய மேலதிக விசாரணைகள் இருப்பின் தொ.பே. இல- 011-2688885/ 011-2690294 மூலம் தேசிய இளைஞர் படையணியின் மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) ஐ அழைக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகை குழு (பிரதான),**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்த,**
**கொழும்பு-07.**
2022.03.19


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk



Best way to fulfil your Future Dreams

E-mail your advertisements to, classified@lakehouse.lk

Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service



# பெண்கள் உலக கிண்ண கிரிக்கெட்: பங்களாதேஷுக்கு எதிராக மேற்கிந்திய தீவுகள் அபார வெற்றி

பெண்கள் உலக கிண்ண போட்டியில் ஆறு பந்துகளில் 8 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில், கடைசி விக்கெட்டை இழந்து பங்களாதேஷ் 4 ஓட்டங்களில் தோல்வியை தழுவியது. நியூசிலாந்தில் இடம்பெற்று வரும் பெண்கள் உலக கிண்ண கிரிக்கெட் தொடரின் நேற்று நடைபெற்ற 17வது ஆட்டத்தில் மேற்கிந்தி தீவு பங்களாதேஷ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மெற்கிந்தி தீவு அணியால் 9 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்களே அடிக்க முடிந்தது. அந்த அணியின் விக்கெட் காப்பாளர் ஷெமைன் கேம்ப்பெல் அதிகபட்சமாக ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்கள் எடுத்தார். பின்னர் 141 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் வீராங்கனைகள் களம் இறங்கினர்.மேற்கிந்திய தீவு வீராங்கனைகளில் நேர்த்தியான பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் பங்களாதேஷ் வீராங்கனைகள் ஓட்டங்கள் குவிக்க திணறினர். என்றாலும் குறைந்த இலக்கு என்பதால் பர்கனா ஹோக் (25), நிகர் சுல்தானா (25), சல்மா கதுன் (23) ஆகியோர் குறிப்பிடத்தகுந்த அளவில் ஓட்டங்கள் சேர்க்க இலக்கை நோக்கி பங்களாதேஷ் சென்றது.என்றாலும் சீரான இடைவெளியல் விக்கெட்டை இழந்ததால் போட்டியில் பரபரப்பு



ஏற்பட்டது. நஹிதா அக்தர் வெற்றிக்காக போராட பங்களாதேஷ் மகளிர் அணி 49 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 133 ஓட்டங்கள் எடுத்திருந்தது.கடைசி ஓவரில் 8 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

முதல் பந்தில் 2 ஓட்டங்களும், 2வது பந்தில் ஒரு ஓட்டமும் அடித்தார் நஹிதா. கடைசி நான்கு பந்தில் 5 ரன்கள் தேவைப்பட்டது.

3வது பந்தை எதிர்கொண்ட பரிஹா த்ரிஸ்னா க்ளீன் போல்டாக பங்களாதேஷ் 49.3 ஓவரில் 136 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்தது.

இதனால் பங்களாதேஷ் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. நஹிதா அக்தர் 25 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை போராடியது வீணானது.



# டெஸ்ட் துடுப்பாட்டவீரர்கள் தரவரிசை முன்னிலை அடைந்த திமுத் கருணாரட்ன

சர்வதேச கிரிக்கெட் வாரியம், டெஸ்ட் துடுப்பாட்டவீரர்களுக்காக வெளியிட்டிருக்கும் புதிய தரவரிசையில் இலங்கை டெஸ்ட் அணியின் தலைவரான திமுத் கருணாரட்ன 5ஆம் இடத்தினைப் பெற்றிருக்கின்றார்.

டெஸ்ட் துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் 8ஆம் இடத்தில் காணப்பட்டிருந்த திமுத் கருணாரட்ன, தற்போது 3 இடங்கள் முன்னேறிய நிலையிலையே 781 போட்டிகளுடன் 5ஆம் இடத்தினைப் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

திமுத் கருணாரட்ன நடைபெற்று முடிந்த இந்திய இலங்கை அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இரண்டாவது இன்னிங்ஸில் அசத்தலான சதம் ஒன்றினைப் பெற்றிருந்ததே அவரின் தரவரிசை முன்னேற்றத்திற்கு காரணமாக அமைகின்றது.

டெஸ்ட் துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்டவீரரான மார்னஸ் லபச்சேனே 936 புள்ளிகளுடன் தொடரந்தும் முதலிடத்தில் நீடிக்க, இங்கிலாந்து அணியின் டெஸ்ட் தலைவர் ஜோ ரூட் 872 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றார். மறுமுனையில் அவுஸ்திரேலிய அணியின் மற்றுமொரு நட்சத்திரவீரரான ஸ்டீவ் ஸ்மித், தொடர்ந்தும் 851 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் காணப்பட நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் 844 ஓட்டங்களுடன் நான்காம் இடத்தில் காணப்படுகின்றார்.

பாகிஸ்தானின் டெஸ்ட் அணித்தலைவரான பாபர் அசாமும், டெஸ்ட் தரவரிசைகளில் முன்னிலை பெற்றிருக்கின்றார். ஏற்கனவே 9ஆம் இடத்தில் காணப்பட்ட பாபர் அசாம், தற்போது ஒரு இடம் முன்னேறி 743 புள்ளிகளுடன் 8ஆம் இடத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் இந்திய அணியின் முன்னாள் தலைவரான விராட் கோலி, டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் 4 இடங்களை இழந்து தற்போது 742 புள்ளிகளுடன் 8ஆம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டிருக்கின்றார். விராட் கோலி தவிர இந்திய அணியின் ஏனைய வீரர்களான ரோஹிட் சர்மா (754 புள்ளிகளுடன்) 6ஆம் இடத்திலும், ரிசாப் பாண்ட் (738 புள்ளிகளுடன்) 10ஆம் இடத்திலும் காணப்படுகின்றனர்.



# டெக் றக்பி சுற்றுப் போட்டியில் கொள்ளுப்பிட்டி புனித மரியாள் பெண்கள் கல்லூரி சம்பியனாக தெரிவு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர் )**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இலங்கை றக்பி சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் 19 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு நடாத்திய டெக் றக்பி சுற்றுப் போட்டியில் கொள்ளுப்பிட்டி புனித மரியாள் பெண்கள் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு சீ.ஆர்.எப்..சி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிக் போட்டியில் பிலியந்தல மத்திய மகா வித்தியாலயத்தை தோல்வியடையச் செய்து இந்த வெற்றியை கொள்ளுபிட்டி புனித மரியாள் பெண்கள் கல்லூரி பெற்றுக் கொண்டது. இச்சுற்றுப் போட்டியில் புனித ஜோசப் பெண்கள் கல்லூரி, கொழும்பு சர்வதேச பாடசாலை, பிரியந்தல மத்திய மகா வித்தியாயலம், கொழும்பு விவேகானந்தா பெண்கள் கல்லூரி, ரத்னவாலி பெண்கள் கல்லூரி, கொள்ளுப்பிட்டி புனித மரியாள் பெண்கள் கல்லூரி, கொழும்பு ஆனந்தா பெண்கள் கல்லூரி என்பன கலந்து கொண்டன.

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற இலங்கை நட்சத்திர வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க தலைமையில் இடம்பெற்ற மேற்படி போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் இலங்கை றக்பி சம்மேளனத்தின் தலைவர் றிஸ்லி இல்யாஸ் கலந்து கொண்டிருந்தார்.

# இறுதிப் போட்டிக்கு கல்முனை சனிமவுண்ட் , மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகங்கள் தெரிவு





**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் நடாத்தி வருகின்ற மாவட்டத்திலுள்ள 'ஏ' பிரிவு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு கல்முனை சனிமவுண்ட் விளையாட்டு கழகமும் மருதமுனை எவரெடி விளையாட்டு கழகமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த சுற்றுப்போட்டி கொரோனா (Covied 19) தொற்று நோய் காரணமாக இடை நிறுத்தப்பட்டு இருந்தது. இந்நிலையில் முதலாவது அரையிறுதிப் போட்டி கல்முனை சனிமவுண்ட் கழகத்திற்கும் மருதமுனை கிறீன்மெக்ஸ் விளையாட்டு கழகத்திற்கும் இடையில் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் (15) இடம்பெற்றது. இப்போட்டியில் 2:0 என்ற கோல் வித்தியாசத்தில் கல்முனை சனிமவுண்ட் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இரண்டாவது அரையிறுதி போட்டி மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகத்திற்கும் கல்முனை பிர்லியன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. இப்போட்டியில் இடைவேளைக்கு முதல் நேரத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாத நிலையில் போட்டி தொடர்ந்து நடைபெற்றது. இறுதிநேரத்தில் முதலாவது கோலினை மருதமுனை எவரெடி விளையாட்டு கழகம் பிர்லியன் விளையாட்டுக் கழகத்திற்கு எதிராக அடித்தது. இதனை அடுத்து போட்டி விறுவிறுப்பாக இடம் பெற்றது. இன்னிலையில் இரண்டாவது கோலினையையும் எவரெடி விளையாட்டு கழகத்தினர் போட 2:0 என்ற கோல் வித்தியாசத்தில் எவரெடி விளையாட்டு கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இப்போட்டியில் பிர்லியன் விளையாட்டு கழகத்தின் இரண்டு வீரர்கள் சிவப்பு அட்டை போடப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த போட்டிக்கு பிரதம நடுவராக அம்பாறை மாவட்ட நடுவர் சங்கத்தின் உறுப்பினர் ஏ.எம்.ஜெப்ரான் கடமையாற்றினார்.

இறுதிப்போட்டி கல்முனை சனிமவுண்ட் விளையாட்டு கழகத்திற்கும் மருதமுனை எவரெடி விளையாட்டு கழகத்திற்கும் இடையில் விரைவில் நடைபெறவுள்ளது. முதலாவது அரையிறுதிப் போட்டிக்கு கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றம்சின் பக்கீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் இரண்டாவது அரையிறுதி போட்டிக்கு பெரியநீலாவணை வைத்தியசாலையில் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.எம்.முஸ்தபா கலந்துகொண்டார்.

போட்டிகளின்போது அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் தலைவர் வை.கே.றஹ்மான், செயலாளரும் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான எம்.ஐ.எம். அப்துல் மனாப், பொருளாளர் எஸ்.எம்.ஹான், சுற்றுப் போட்டி தவிசாளர் என்.எம்.ஜெலீல், நடுவர் சங்கத் தலைவர் எம்.பி.எம். ரஷீட், எம்.எல்.றபீக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அனுராதபுரம் சன்வென் கிரிக்கெட் அணி சம்பியன்

**( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

சமுர்த்தி சவால் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் நுவரகம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அனுராதபுரம் லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.இம்மாதம் 13 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இக்கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தை ரஜரட்ட றோயல் கிரிக்கெட் அணியும், இரண்டாம் இடத்தை பிளாக் வொரியர்ஸ் கிரிக்கெட் அணியும், சம்பியன் பட்டத்தை அனுராதபுரம் சன்வென் விளையாட்டுக் கழக கிரிக்கெட் அணியும் வென்றன.

சமுர்த்தி வங்கி முறைமையில் இளைஞர்கள் தாராளமாக பங்களிப்பை வழங்கும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக இறுதி நாள் நிகழ்வில் கலந்து



கொண்ட இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு நுவரகம் மாகாண சபையின் தலைவர் எஸ்.பி.குமாரதாச, மாநகர சபை உறுப்பினர் இந்திக்க ஹெந்தவிதாரண, கிழக்கு நுவரகம் மாகாண சபையின் பிரதேச செயலாளர் ருவன் ஏகநாயக்க, அனுராதபுரம் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ.வசந்த, சமுர்த்தி உதவிப் பணிப்பாளர், கிழக்கு மாகாண சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள் உட்பட பிரதேச வாசிகள் பலர் கலந்துகொண்டனர்

# சம்மாந்துறையில் எஸ்.டி.ஆர்.சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி

**(சவளக்கடை குறூப் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்திலுள்ள 25 விளையாட்டு கழகங்கள் கலந்து கொண்ட எஸ்.டி.ஆர். சம்பியன்ஸ் கிண்ண மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி சம்மாந்துறை புதிய பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் சம்பியனாக எஸ்.டி.ஆர் விளையாட்டு கழகம் தெரிவானது.

சுற்றுப்போட்டியில் எஸ்.டி.ஆர்.விளையாட்டுக் கழகமும், சம்மாந்துறை நியூசன் விளையாட்டுக் கழகமும் இறுதிச்சுற்றுக்கு தெரிவானது. முதலில் துடுப்பெடுத்தாடி எஸ்.டி.ஆர்.விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு 64 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாட



சம்மாந்துறை நியூசன் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 52 ஓட்டங்கை மாத்திரம் பெற்றுக் கொண்டு 11 ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.

ஆட்ட நாயகனாக எஸ்.டி.ஆர். விளையாட்டுக் கழக வீரர் சாஜித் மற்றும் தொடரின் நாயகனாக நியூசன் விளையாட்டுக் கழக வீரர் சாகிர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்கனான் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தார்.

இப்பத்திரிகை அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.